SWATHANTRA SANGU Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு

வாரப் பதிப்பு

18712

பத்திரிகைகளைக் கொல்ல
—படம்.

கழுதை வண்டி ஓடும் விதம்
—படம்.

அபூர்வப் பஞ்சாயத்து—'மாயா'.

தமிழ் பாட்டிகள்—'ஆயில்யம்'.

சட்டம் பெரிதா?—ஜீவன் பெரிதா
—ஸ்ரீ. வ. ரா.

கிழிந்த புத்தகம்—கதை.

'அபிப்பிராய பேதம்'
—சங்கு. மணி.

'முன்போல இருக்கேளோ?'
—தி. ஜ. ர.

புத்தகம் 4. மாசி மீ 12உ (23-2-34) வெள்ளி இதழ் 13.

சத்திய சோதனை

முதல் பாகம் ரூ. 1-8.

இரண்டாம் பாகம் ரூ. 2.

மகாத்மா காந்தி

தம் சுயசரிதத்தை இதில் சொல்லியிருக்கிறார்.

சுதந்திரச் சங்கு காரியாலயம், 8-c, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu"

A high class popular Tamil weekly.

Price one anna a copy.

Annual subscription :

Inland Rs. 4. **Foreign Rs. 6.**

ADVERTISEMENT TARIFF

	Per Insertion.		
Advertisement rates per Page	Rs. 40	0	0
" Half Page	Rs. 20	0	0
" Quarter Page	Rs. 10	0	0
" per column inch	Rs. 1	8	0

One page is divided into 3 columns of $2\frac{1}{4}'' \times 9''$

Cover Pages

2nd & 3rd cover page Rs. 50.

4th cover page Rs. 75.

For contracts of 3 months, 6 months and One year a discount of 5, 10 & 15% respectively will be given over these rates.

Office : 8-c, Pycrofts Road,

TRIPLICANE, MADRAS.

"சுதந்திரச் சங்கு"

ஒரு உயர்தரத் தமிழ் வாரப் பத்திரிகை.

தனிப் பிரதி விலை அணு 1.

வருடச் சந்தா :

உள்நாடு ரூ. 4. வெளிநாடு ரூ. 6.

விளம்பர விகிதங்கள்

ஒரு பக்கத்திற்கு தடவை ஒன்றுக்கு	ரூ. 40	0	0
அரைப் பக்கத்திற்கு ,, ,,	ரூ. 20	0	0
கால் பக்கத்திற்கு ,, ,,	ரூ. 10	0	0
ஒரு பத்தி ஒரு அங்குலத்துக்கு ,, ,,	ரூ. 1	8	0

ஒரு பக்கம் $2\frac{1}{4}'' \times 9''$ அளவுக்கு 3-பத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அட்டைப் பக்கங்கள்

2-வது, 3-வது பக்கங்களுக்கு ஒரு தடவைக்கு ரூ. 50.

4-வது பக்கத்துக்கு ஒரு தடவைக்கு ரூ. 75.

3-மாதம், 6-மாதம், ஒரு வருஷம் ஒப்பந்தங்களுக்கு, இந்த விகிதங்களிலிருந்து முறையே நூற்றுக்கு 5, 10, 15 வீதம் 'டிஸ்கவுண்ட்' தள்ளிக் கொடுக்கப்படும்.

மானேஜர்,

"சுதந்திரச் சங்கு",

8-c, பைக்ராப்ட்ஸ் ரோடு,

திருவல்லிக்கேணி, சென்னை.

சுதந்திரச்சங்கு

"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லாமேடுத் தோதுவோமே"

போன் நெ. 8088 ஆசிரியர்: சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

Vol. IV.] மாசிமீ 12உ வெள்ளிக்கிழமை (23—2—1934) [No. 13

அகால ஐந்துக்கள்

செக்கிழுத்த மாடு உழவுக்கு உதவா தென்பார்கள். வட்டமிட்டுச் சுற்றுவதே செக்கு மாடுகளின் வழக்கம். அந்த ரீதியிலேயே இந்திய மிதவாதப் பிரமுகர்கள் ஏதோ ஒன்றைப் பிடித்துக்கொண்டு சுற்றிச் சுற்றி வருவார்கள். சில நேரம் பிரிட்டிஷ் ஆட்சியைப் புகழ்வார்கள். பிறகு வெள்ளை யறிக்கையைக் கண்டிப்பது போலப் பேசுவார்கள். நாளைக்கு அரசாங்கம் சிறந்த பதவிகளைக் காட்டி மினுக்குமாகில் அந்தப் பதவிகளை வேட்டையாடுவதில் போட்டி போடுவார்கள். மிதவாதியை 'அகால ஐந்து' என்று ஒதுக்கவேண்டுமே யன்றி, அவர்கள் கருத்துக்களைத் தேசம் கவனிக்கக் கூடாது. இருபது வருஷங்களுக்கு முன்னே, சுயராஜ்யத்தைப் பிரிட்டனிட மிருந்து பிச்சை கேட்டு வாங்கிவிடலாமென்ற எண்ணம் இருந்த காலத்தில், உற்பத்தியான ஐந்துக்கள் மிதவாதிகள். இதுவோ காந்தி காலம்; நம் சக்தியைக் கொண்டே நமது உரிமையை அடையவேண்டுமென்ற எண்ணம் முன்னேறி வருகின்ற காலம். ஆகவே மிதவாதிகளை அகால ஐந்துக்களென அழைப்பதில் தப்பிதமில்லை யென்றே தோன்றுகிறது.

மிதவாதிகள் பம்பாயில் கூடப் போகிறார்களாம். வெள்ளை யறிக்கையிலுள்ள தவறுகளை யெல்லாம் எடுத்துப் பிரிட்டனுக்குக் காட்டப் போகிறார்களாம். ஆகாகான் டெல்லிக்குச் சென்று சில முஸ்லீம்களை யெல்லாம் தம் வசமாக்கி ஓர் புதிய முஸ்லீம் சபையைச் சிருட்டிக்க முயன்று வருகிறாராம். இப்படியெல்லாம் நர்த்தனமாடி அரசாங்கத்தின் கண்களில் பட்டுக் கொண்டிருக்க ஏற்பாடுகள் செய்து கொள்ளலாமே யன்றித் தேச மக்களை மயக்கிவிட முடியாதென்பதை இவர்களனைவரும் அறிந்துகொள்ள வேண்டும்.

அரசாங்கத்துக்கு ஏறியுள்ள அடக்குமுறை விஷமோ கொஞ்சங்கூட இறங்கிபபாடில்லை. ஜவஹருக்கு இரண்டு வருஷம் தண்டனை! காந்திஜியின் ஆத்ம நண்பரான காகா கலேல்கருக்கும் 2 வருஷக் கடினக் காவல்! கிருஷ்ணகாந்த மாளவியாவின் அப்யுதயா அச்சுக்கூடத்துக்கு 1000 ரூபா ஜாமீன்! இந்தப் பத்து நாட்களுக்குள் இதைப் போல எவ்வளவோ நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. இவையெல்லாம் துரைத்தனத்தின் அதிகாரத் திமிரையே மீண்டும் நிரூபிக்கின்றன. காங்கிரஸ் மகாசபை மீண்டும் கூடுவதற்கும், தேசத்தைப் பற்றி ஆராய்வதற்கும், வசதி தருவதற்கு அரசாங்கம் இணங்காத வரை, வேறு யார்தான் கூடி என்ன தீர்மானம் செய்துவிட முடியும்?

இப்போது இந்திய மிதவாதிகள் ஒரு கூட்டம் நடத்தினார்களானால், அந்தக் கூட்டத்தை உபயோகித்துக் கொள்ள, பிரிட்டிஷ் ராஜதந்திரி தயங்க மாட்டான். இந்திய மிதவாதிகளை வெள்ளை அறிக்கை வண்டியில் பூட்டி அவர்களையே இழுத்துச் செல்லும்படி செய்துவிடுவான். ஓட மறுத்தால் எதிரே 'குடியேற்ற நாட்டு அந்தஸ்து' என்ற தீனியை ஓர் குச்சியில் கட்டி நீட்டி ஏமாற்றுவான். அதற்காக நாக்கை நீட்டிக்கொண்டு ஓடுவதால் ஏதும் கிட்டப்போவதில்லை

கழுதை வண்டி ஓடும் விதம்



—*Courtesy*: ஹிந்துஸ்தான் டைம்ஸ்.

முன்னே குச்சியில் ஒரு கிழங்கைக் கட்டித் தோங்கவிட்டு மிருகத்துக்கு ஆசை யூட்டி ஓட்டுவது சில வண்டிக்காரர்களின் தந்திரம்.

ரயில்வே வரவுசெலவு

மிளகாய்த் தொக்கு அல்ல; என்றாலும் ரொம்பக் காரமான தொக்குத்தான் நாம் கீழே குறிப்பிடும் தொக்கும். ஆனால், இது சர்க்காருக்கு உறைக்கவில்லையாம். இந்தியச் சட்டசபைக்கும் உறைக்கவில்லை யென்றே தோன்றுகிறது. சர்க்கார் மெம்பர் இந்திய ரயில்வே வரவு செலவுக் கணக்கைச் சட்டசபை முன் ஆஜர் செய்தாராம். அதில் விழுந்திருக்கும் "தொக்கு" ரூபாய் 7¾ கோடி. இந்த அருமையான கணக்கை, அவர் "உரத்த சந்தோஷ ஆரவாரத்துக் கிடையே" சமர்ப்பித்தாராம்.

அதற்கு மேலே அழகான ஒரு பேச்சு வேறே. இந்திய ரயில்வேக்கள் தான் உலகத்திலேயே மிகச் சிறந்தவையாயிருக்கின்றனவாம். எந்த விதத்திலோ? வண்டிக்கு வண்டியுள்ள மூட்டுப் பூச்சி எண்ணிக்கையினாலா, கம்பெனிப் பங்குதார்களுக்குக் கிடைக்கும் லாப விகிதத்தினாலா, அல்லது ஏழைத் தொழிலாளருக்குக் கொடுக்கும் கூலிக்கு குறைவாலா? அதுதான் கொஞ்சம் விளக்கப்படவேண்டும்.

ரயில்வேயின் சிறப்பை வேறுவிதமாகவும் கவனிக்கலாம். முன்னேற்ற நாடுகள் அப்படித்தான் செய்கின்றன. (1) வேகம் (2) சுகம் (3) பத்திரம் (4) சரியான அட்டவணை (5) தொழிலாளிகள் க்ஷேமம் (6) தேச வியாபாரங்களுக்கு உதவி—இந்த விஷயங்களில், நமது ரயில்வேக்கள், உலகத்திலுள்ள வேறெந்த ரயில்வேக்களோடும், கடைசியிலிருந்து முதல் 'பிரைஸ்' அடிக்கும் போட்டியில் கட்டாயம் வெல்லக்கூடியவை என்றுதான் சொல்ல வேண்டும்.

தன்தன் தேச ரெயில்வேக்கள் வாங்கும் சாமான்களைக் கொண்டே, சில நாடுகளின் பல தொழில்கள் பெரிதும் பிழைத்துக்கொண்டிருக்கின்றன. நமது ரெயில்வேக்கள் வாங்கும் சாமான்களை உள் நாட்டிலேயே வாங்கவேண்டு மென்று எத்தனையோ சொல்லியும், சர்க்கார் கேட்கமாட்டேனென்கிறது. இனிக்க இனிக்கச் சட்டசபையில் வந்து பேசுவதும், அங்கு சிலர் வாய்ப்பேச்சு ஆர்ப்பாட்டம் செய்வதும், பிறகு எல்லாம் பழைய கதையாகவே முடிவதும் சர்வ சகஜமாகப் போய்விட்டது. எத்தனை காலந்தான் இப்படியே ராஜ்யபாரம் நடந்து கொண்டிருக்கப் போகிறதென்று பார்க்கலாம்.

"போனால் வராது"

"போனால் வராது! பொழுது விடிஞ்சால் கிடைக்காது" இந்தக் குரலைச் சந்தைகளில் நாம் கேட்டிருக்கிறோம். ஆனால் இதே வார்த்தைகளைச் சீமையில் இந்தியா மந்திரி ஸாமுயேல் ஹோரும் சொல்லியிருக்கின்றாராதலால் அவருக்கும் சந்தைக் கடைப் பழக்கம் இருக்கும்போலிருக்கிறது. "இந்தியா விஷயத்தை இப்போதே பிரிட்டிஷ் சர்க்கார் கவனித்தாக வேண்டும். இப்போதுதான் நல்ல சந்தர்ப்பம்; இப்போது தவறினால் பிறகு நமது ஆயுளில் வேறு வழி கிடைக்கவே கிடைக்காது" என்று பிரமாதமாகப் பேசியிருக்கிறார். ராஜீயமா? சந்தைப் பேச்சா?

சில்லரை விஷமம்

பீகாரில் இயற்கைத் தெய்வம், சர்க்கார் உத்தியோகஸ்தன் என்றோ, ஏழைக்குடியானவனென்றோ, ராஜீயக் கட்சியானென்றோ வேற்றுமை பார்க்கவில்லை. பூகம்பத்தின் கோரத்தாண்டவம் எல்லாரையும்தான் துன்பப்படுத்தி விட்டது. அங்கே கஷ்டப்பட்டு வெம்பும் ஜனங்களுக்கு எல்லாரும்தான் உதவி புரியவேண்டும். சர்க்காரும் அந்த உரிமை தனக்கே யென்று தனிப் பாத்தியம் கொண்டாடவில்லை. ராஜேந்திர பாபுவின் பூகம்ப நிதிக்கு அனுப்பும் பணத்திற்கும் மணியார்டர் கட்டணம் கிடையாதென்று சர்க்கார் உத்திரவு கூடப் பிறந்திருக்கிறது. இப்படியிருந்தும், மத்திய மாகாணத் துரைத்தனம் ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ஒரு அற்பத்தனமான கட்டளையை விடுத்திருக்கிறதாம். "ஸ்தல ஸ்தாபனங்களெல்லாம் வைசிராய் பூகம்ப நிதிக்கே தங்கள் நன்கொடைகளை அனுப்ப வேண்டும்" என்று அந்தக் கட்டளை சொல்லுகிறதாம். ராஜேந்திர பாபுவின் நிதிக்கு ஏன் அனுப்பக்கூடாது? பூகம்பக் கஷ்ட நிவாரணம் என்பது சந்தைக் கடைப் போட்டி வியாபாரமா? அப்படியாவது சர்க்கார் பகிரங்கமாகச் சொல்லிவிடட்டுமே. ராஜேந்திரபாபுவின் வேலையைப் பார்த்துச் சகிக்கவில்லை யென்று சர்க்கார் சொல்லத் துணியாது. அப்படியானால், இந்தச் சில்லரை விஷமங்கள் எதற்கு?

பம்பாயும் சென்னையும்

பம்பாய்த் துரைத்தனம் அநேக விடங்களில் 2 அணுவுக்கு மேல் பத்தணு வரையில் நிலவரியை வஜாச் செய்திருக்கிறது. பர்தோலி தாலுகாவில் எவ்வளவு வஜா என்ற விவரம் கிடைக்கவில்லை. ஆயினும் சென்னைத் துரைத்தனம் இரண்டு அணுவுக்கு மேல் வஜாச் செய்ய முடியாதென்று பிடிவாதமாய் இருந்து வருகிறது. ஆனால் சென்னை மாகாண விவசாயியின் கஷ்டம் லேசாக இல்லை. பம்பாய்த் துரைத்தனத்துக்கும் சென்னைத் துரைத்தனத்துக்கும் விவ்சாயிகளிடம் நடந்து கொள்வதில் இவ்வளவு வித்தியாசமிருக்கக் காரணமென்ன? அது பம்பாய், இது சென்னை அதுதான் காரணமோ?

விமானம் பறக்காதோ?

கிடையாதையா கிடையாது. இந்திய ராணுவ ஆகாயப் படையில் இந்தியருக்கு இடம் கிடையாது. இந்தியா ராணுவத் தளபதி அன்று ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கையில் விளக்கமாகச் சொல்லிவிட்டார். "ஆகாயப் படை பிரிட்டிஷ் சர்க்கார் நிர்வாகத்திலுள்ளது; இந்தியரை அதில் அநுமதிப்பதில்லை. ஆனால் இந்திய ஆகாயப் படை யென்று பிரத்தியேகமாக ஒன்று உளது. இந்தப் படை இந்திய ராணுவத்தின் ஒரு பாகமன்று" என்பது தளபதியின் பதில். இந்திய ராணுவ ஆகாயப் படையில் இந்தியரை சேர்த்துக் கொண்டால் என்ன அபாயம் வந்துவிடுமோ தெரியவில்லை. ஒரு இந்தியன், இந்த ராணுவ விமானத்தின் 'ஸ்டீயரிங் கைப் பிடித்தால்' விமானம் பறக்காதோ?

மண்ணரசும் மண்ணெண்ணெயும்

பர்மாவில் உள்ள ஓர் மண்ணெண்ணெய்க் கம்பெனி ஏராளமாக லாபம் அடித்துக்கொண்டிருக்கிறது. பிற நாட்டினின்று எண்ணெய் வருவதானல் பர்மாக் கம்பெனியோடு விலையில் போட்டி போட முடிவதில்லை. ஏனெனில் பிறநாட்டு எண்ணெய்க்கு ஏராளமான துறைமுக வரி உண்டு. பர்மாவில் பிரிட்டிஷ் வர்த்தகர்களின் ஆதிக்கத்திலுள்ள அந்த எண்ணெய்க் கம்பெனியின் சரக்குகளுக்கும், இந்தியாவில் இறக்குமதி வரி விதித்தாலென்ன வென்று ஓர் தீர்மானம் டெல்லி சட்டசபையில் விவாதத்துக்கு வந்தது. இந்தத் தீர்மானத்துக்கு ஆதரவு தரவேண்டாமெனச் சீமையினின்று இந்திய சர்க்காருக்கு எச்சரிக்கை வந்ததாக வதந்தி. பிரிட்டிஷ் அரசாங்கம் தங்கள் மண்ணெண்ணெய் வியாபாரிகளிடத்தில் எவ்வளவு சலுகை பாராட்டுகிற தென்பதற்கு, பாரசீகத் தகராறுக்குப் பின் இது ஒரு உதாரணம். மண்ணரசும் மண்ணெண்ணெய் வர்த்தகமும் பிரிட்டிஷாருக்கு ஒன்றெனத் தோன்றுபவை. இதில் பிறருக்கு விட்டுக் கொடுப்பார்களா?

கொழுந்து விட்ட மூளை

மிதுனபுரி மாஜிஸ்திரேட்டின் மூளை கொழுந்து விட்டு வளருகின்றது. வங்காளத்துக்கு மகாத்மாஜி வரும்போது மிதுனபுரிக்கு அவரை வரவேற்கலாமா வென்று ஸ்ரீயுத சஸ்மால் அந்த மாஜிஸ்திரேட்டுக்கு எழுதிக் கேட்டாராம். "தற்சமயத்தில் மகாத்மா இந்த ஜில்லாவுக்கு வருவது சரியன்று" என்று அந்த மாஜிஸ்திரேட் சொல்லிவிட்டாராம். மிதுனபுரியைப் 'புரட்சிக்காரர்களின் பொந்து' என்று வங்காள துரைத்தனத்தார் தம்பட்டம் அடித்தார்கள். கலிகாலத்தில் அகிம்சா தர்மத்தைப் பரப்புவதற்குப் பிறந்துள்ள அவதாரமூர்த்தியான காந்தியடிகள் அந்த ஜில்லாவுக்குப் போனல் ஒருவேளை அங்கு புரட்சிக்காரர்களிருப்பது வாஸ்தவமானல் அவர்கள் மனதைத் திருப்பும் சக்தி அவருக்கு உண்டு. 'புரட்சியை அடக்க எங்களுக்கு உதவி செய்ய மாட்டேனென்கிறீர்களே!' என்று வங்காளத் துரைத்தன அதிகாரிகள் அடிக்கடி கூக்குரலிடுவர். அகிம்சா தர்ம மூர்த்தியான காந்திஜி மிதுனபுரிக்கு வருவது உசிதமன்றெனக் கூறியது அந்த மாஜிஸ்திரேட்டின் மூளையில் தோன்றிய எண்ணமா? அல்லது வங்காளத் துரைத்தனத்தின் ஆலோசனையா?

கை இங்கே, மூளை அங்கே

இந்திய வியாபாரத்தை ஒரே யடியாய் நிமிர்த்திவிட மகானுபாவன் மோடி, லங்காஷயர் முதலாளிகளோடு ஒப்பந்தம் செய்தாலும் செய்தார்; அந்த ஒப்பந்தம் சந்தி சிரிப்பதைக் கண்கொண்டு பார்க்க சகிக்கவில்லை. உறக்கமே பிறவிப் பயன் என்று எண்ணி மகிழும் பெரியோர் நிறைந்த இந்தியச் சட்ட சபையில் கூட இந்த ஒப்பந்தத்துக்குப் பலமான இடிதான்.

நடுவிலே ஒருவர் கேட்டார்:—"இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றச் சர்க்கார் ஏதாவது முயற்சி செய்யுமா?"

ஜோஸப் போர் பதில்:—"சர்க்கார் இவ்விஷயத்தில் கை வைக்க முடியாது."

முடியுமோ? முடியவே முடியாது. அதில் வைக்கக் கூடிய கை மோடியிடமிருக்கிறது; சந்தேகமே யில்லை. ஆனல், அந்தக் கையை ஆட்டுவிக்கக் கூடிய மூளை எங்கே யிருக்கிறது? அதுதான் லங்காஷயர் முதலாளியிடம்; அதிலும் சந்தேகமில்லை.

அது ரஸமா யிருக்குமே

அலஹாபாத்தில் ஸாப்ரூ 'நல்ல வக்கிலாக ஆவதெப்படி?' என்று ஒரு பிரசங்கம் செய்தாராம். அதே சமயத்தில் பம்பாயில் ஜயகர் 'வக்கீல் தொழிலில் மேன்மையுறுவ தெப்படி?' என்று ஓர் பிரசங்கம் செய்தாராம். சீமைக்குப்போய் வெறுங் கையோடு எப்படித் திரும்புவது என்ற விஷயமாக இருவரும் பேசியிருந்தால் வெகு ரஸமாக இருக்குமன்றோ!

பத்திரிகைகளைக் கொல்ல



—*Courtesy*: ஹிந்துஸ்தான் டைம்ஸ்.

பத்திரிகைத் தொழிலைக் கொல்ல எவ்வளவு ஏற்பாடுகள் நடக்கின்றன அப்பா! 'அவசரச் சட்டம்' என்ற முதலை ஏற்கனவே பிடித்துக் கொண்டிருக்கிறது. 'ஜாமீன் தொகை' என்ற இரும்புக் குண்டு கழுத்தில் கட்டப்பட்டுத் தண்ணீருக்குள் இழுத்துக்கொண்டிருக்கிறது. இந்தச் சமயத்தில் 'இந்திய மன்னர் பாதுகாப்புச் சட்டம்' என்ற கல்லையும் தூக்கிப் பத்திரிகையின் தலையில் போடுவதற்கு ஏற்பாடாகி வருகின்றதே, என்ன அநியாயம்!

ஜலம் படாத முழுக்கு

"என்னை எனது நண்பர்களிடமிருந்து காப்பாற்றுமே, ஈசா" என்று காந்திஜீ அடிக்கடி ஏங்குவதுண்டு. பகைவரின் குரோதத்தைவிட நண்பர்களின் அன்பு சில சமயம் தாங்க முடியாது போய்விடுகிறது. கேல்கருக்கு, காங்கிரஸினிடம் வெகு காலமாக இல்லாத அன்பு இப்போது பிறந்திருக்கிறது. 'ஜனநாயக சுயராஜ்யக் கட்சி' உயிரோடிருப்பதாக, அவர் சொல்லுகிறார். அதன் 'ஏகதேசப் பிரதிநிதி'யாக இவர் தலையை வெளியே நீட்டுகிறார். இந்தச் சபை காங்கிரசின் வேலையைத் தொடர்ந்து செய்யப் போகிறதாம்; நேர்முகமான போராட்டத்தைக்கூட இது கைக்கொள்ளுமாம். ஆனால், அந்தப் போராட்டம் இதன் கட்டுப்பாட்டைக் குலைக்காததாயிருந்தால்தான் அப்படிச் செய்யுமாம். மேலும், காங்கிரஸ் தீர்மானங்களில், தனக்குச் சம்மதமுடைய அத்தனையையும் இது அப்படியே அனுஷ்டித்துத் தீர்த்துவிடப் போகிறதாம். "சம்மதமுடைய" "முடிந்த மட்டில்" "சாத்தியப் பட்டால்" என்ற அடைமொழிகள் எதோடு சேர்ந்தாலும், "சந்தேகமில்லாத ஏமாற்று" என்ற அர்த்தம் பண்ணிக்கொள்ள வேண்டிய சமயங்கள் ரொம்ப உண்டு. கேல்கரின் வித்தாரப் பேச்சு இப்பேர்ப்பட்ட ஜாதியையே சேர்ந்தது. கேல்கரைப் போன்ற மிதவாதிகள் 'அக்கடா'வென்று ஒதுங்கிக் கிடந்தால், அவர்களுக்கும் கௌரவம்; தேசத்துக்கும் நன்மை. ஜலம் படாமல் ஸ்நானம் செய்துவிட வேண்டும் என்று ஆசைப்படும் ரகத்தைச் சேர்ந்த இவர்களுக்கு எத்தனை சொன்னாலும் செவியில் ஏறமாட்டேனென்கிறதே!

பட்டங்கள் பறந்தன

"இனிமேல் ஒருவருக்கும் பட்டங்கள் அளிக்கப்பட மாட்டா! 'பே', 'எப்பண்டி' முதலியவைகளைச் சேர்த்து எவரையும் அழைக்கலாகாது" என்று ஒருநாள் காலையில் காஜி முஸ்தாமா கமால்பாஷா துருக்கியில் தாக்கீது போட்டுவிட்டார். பட்டங்கள் காற்றில் பறந்துவிட்டன. ஐரோப்பாவில் பிரான்ஸு, ஸ்பெயின் முதலிய நாடுகளிலும் துரைத்தனங்கள் பட்டங்களைப் பிடுங்கி விட்டதை நாம் மறப்பதற்கில்லை. "சில மனிதருக்கென்று பட்டங்களளிப்பது ஜனநாயக உணர்ச்சிக்குப் பொருத்தமன்று" என்று கமால் பாஷா சொன்னாராம். பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் ஜனநாயக அரசியல் இருப்பதாகப் பெருமை பேசிக்கொள்வது ஆங்கிலேயர் வழக்கம். அப்படியானால் துருக்கி போன்று இந்தப் பட்டமளிக்கும் வழக்கத்தை நிறுத்திவிடட்டுமே. ஆனால் அவ்வாறு ஆங்கிலேயர் செய்ய மாட்டார்கள். ஏனெனில் இந்தியர்களில் சிலரை ஏமாற்றித் தங்களுக்கு ஆயுட்சேவகர்களாகச் செய்து கொள்வதற்கு இந்தப் 'பட்டங்கள்' சிறந்த கருவிகளாக இருக்கின்றனவன்றோ! ஆனால் பட்டங்களுக்காகப் பல்லிளித்துத் திரியும் கூட்டத்தை மட்டும் நமக்குப் பார்க்கச் சகிக்கவில்லை; என் செய்வது?

நீதியற்ற நிறத்திமிர்

சீமைக் கிரிக்கட் கோஷ்டி வந்து போய்விட்டது. தென்னாப்பிரிக்காவினின்று ஒரு கிரிக்கட் கோஷ்டியை வரவேற்பதற்கும் ஆங்காங்கு பந்தயங்கள் நடத்துவதற்கும் இந்தியன் கிரிக்கட் போர்டார் ஏற்பாடு செய்திருக்கிறார்களாம். தென்னாப்பிரிக்காவிலுள்ள அத்தனை வெள்ளையர்களும் நிறத்திமிர் பிடித்தவர்கள். இன்றைக்கு நமது சகோதரர்கள் அந்த நாட்டில் நடத்தப்படும் விதத்தினின்றே தென்னாப்பிரிக்கா வெள்ளையர்களின் யோக்யதையை அறியலாம். இவர்கள் நம் நாட்டுக்கு வந்தார்களானால் வர்ணத் திமிர் இல்லாது இந்தியர்களோடு சரிசமானமாக நடந்து கொள்வார்களா என்பது சந்தேகமே.

சீமையினின்று வந்து சென்ற கிரிக்கெட் கோஷ்டியின் யோக்யதை சென்னையிலேயே தெரிந்துவிட்டது. லட்சக்கணக்கான இந்தியர்கள் கொடுத்த காட்சிக்கூலியில் ஊர் சுற்றுகிறோமென்பதை மறந்து இந்திய கிரிக்கெட் வீரர்களை அவர்கள் நிறத்திமிரோடு நடத்திய செய்திகளைக் கேட்டு ஊர் சிரித்துவிட்டது. ஆங்கிலோ இந்தியப் பத்திரிகையான மதராஸ் மெயில்கூட இந்த ரகசியத்தைப் பிரசுரிக்க வில்லையா? மைதானத்தில் நின்று ஆடுவதற்கு மட்டும் இந்தியர்கள்வேண்டும்; காட்சி பார்க்கும் கட்டணம் செலுத்த இந்தியர்கள் வரவேண்டும்; ஆனால் திரையின் பின்னே நிறத்திமிரோடு இந்த வெள்ளைக்காரர்கள் நடந்துகொள்வது என்ன யோக்யதையைச் சேர்ந்தது. இந்தியர்களைத் தீண்டத்தகாதவர்களென நினைத்து ஒதுக்கும் எந்தக் கோஷ்டியோடும் இந்தியர் ஏன் விளையாடவேண்டும்? கோஷ்டி சீமையிலிருந்து வந்தாலென்ன? ஆப்பிக்காவினின்று வந்தாலென்ன? சந்திர மண்டலத்தினின்று குதித்தால்தானென்ன?

சீமை கிரிக்கட் கோஷ்டியின் காப்டன் ஜார்டைன் சிலோன் விஜயத்தில் செய்துள்ள ஒரு காரியம் அநேகரைப் புண் படுத்தியிருக்கிறது. அங்கு சில சிங்களவர் தமாஷாக ஜார்டைன் அருகில் போய்ச் சும்மா நின்றுகொண்டிருந்தார்கள். ஜார்டைன் போலீஸ்காரர்களைக் கூப்பிட்டு அத்தனை சிங்களவரையும் அப்புறப் படுத்துமாறு உத்தரவிட்டானாம். இதுதான் நாகரிக நடத்தையோ? பிரிட்டிஷார் விளையாட்டு மைதானங்களில் தங்களைப் பந்தய நீதியுள்ள தாராள மனமுடையோர் (Sportsmen) என வர்ணித்துக் கொள்வது வழக்கம். ஆனால் அது பொய் விளம்பரம் என்பது சென்னைச் சம்பவத்தினின்றும் சிங்களச் சம்பவத்தினின்றும் தெரிகிறது. பிரிட்டிஷ் கோஷ்டியின் வண்டவாளமே இப்படியிருக்குமாகில் நிறத்திமிர் ஊறியுள்ள தென்னாப்பிரிக்கா வெள்ளையர்கள் எப்படி நடந்துகொள்வார்களென்பதை ஊகிக்கலாம். ஆகவே இனி இத்தகைய அந்நியர்களுக்கு வரவேற்புத் தரவேண்டாமென்றே இந்திய கிரிக்கெட் போர்டுக்கு எழுதுகிறோம்.

BOOKS by MAHATMA GANDHI

(in English)

	Rs.	A.
Satyagraha in South Africa ...	4	8
Young India Vol. I ...	4	0
Young India Vol. II ...	4	0
A Guide to Health ...	0	12
Neethi Dharma ...	0	8
Indian Home Rule ...	0	8

மன நிழல்

(பிக்ஷு.)

(1) தரிசனம்.

நேற்றிரவு வெகு நேரம் படித்துக் கொண்டிருந்தேன். புஸ்தகம் முடிந்து விட்டது. வாணி தர்சனம் முடிந்ததும் பிருகிருதிதேவியைக் காண வெளியே சென்றேன். ஆகாயம் ஓர் எல்லையற்ற மைக்கூண்டு. விளையாட்டுத் தனமாய் ஏதோ தெய்வீகக் குழந்தை அதைக் கவிழ்த்து விட்டது போலும்! ஒரே இருள் பிரவாகம். மரங்களெல்லாம் விண்ணைத் தாங்கும் கறுப்புத் தூண்கள். மின்னும் பொழுதெல்லாம் வானம் மூடி மூடித் திறந்தது; கண் சிமிட்டிற்று. நான் கண்ணாம்பூச்சி விளையாடினேனா அல்லது மின்னலா?........

திரும்பி வீட்டிற்குள் வந்து பாயைப் போட்டேன். துயில்திரை கண்களின் மேல் படர்ந்தது. ஆமைக் கால்களைப் போல், என் புலன்கள் சுருங்கி உறங்க ஆரம்பித்தன. மனத்தின் சுடர் விழி மட்டும் முழுதும் மூடவில்லை. வௌவால் முகத்தினருகில் அடித்தது. கண் திறந்தேன். எதிரில் ஆகாயமளாவி நின்றாள் சிவசக்தி. தலை மயிர் வெற்றிக் கொடிபோல் பறந்தது. கண்ணினின்று கொஞ்சும் அழகு. கையினில் கொடி மின்னலைப்பழிக்கும் வைரவாள். என்னைப் பார்த்துச் சிரித்தாள். கலகலவென்ற சிரிப்பு உலகெங்கும் பரவியது. உடல் மயிர்க்கூச் செறிந்தது.....

சிறிது நேரம் கழிந்தது. அலையோய்ந்த கடல்போல் சற்று நெஞ்சம் ஆறுதலடைந்தது. போர்வையை எடுத்தேன்; பளீரென்று ஒரு மின்னல் உலகை ஒளிரச் செய்தது. அவ்வெளிர் "சொக்கப் பானையில்" எதிரே கண்ணில் பட்டது ஒரு மரம்—ஒரு வெறும் நெட்டைத் தென்னை! என்ன ஆச்சர்யமென நினைத்து "நமஸ்தே என்றேன்...."

(2) மழைத் தெய்வம்.

மறுபடியும் இன்றையதினம் கொடும்பாவி கட்டி இழுத்தார்கள். ஆமாம், கொடும்பாவி என்று என்ன பெயர்? இருக்கட்டும். குடியானவர்கள் ஒரு கையில் ஒரு பிடி நெற்பயிரை வைத்துக் கொண்டு மற்றொரு கையால் கொடும்பாவியைத் தெரு வழியே இழுத்துச் சென்று, கடைக்குக் கடை நின்று கொடும்பாவியின் புருஷன் சூரியனைத் திட்டி, மாரில் அடித்துக் கொண்டு வைத்த ஒப்பாரியைக் கேட்டபொழுது (நடிப்பு ஒப்பாரியாக இருந்தும்கூட) என் உள்ளம் உருகிப் போய்விட்டது. பாவம்! மண்மீது மழையில்லை என்றால், வயிற்றில் மண்தானே! எனவே "மானம் பார்த்த" சீமையென்று சில இடங்களை ஏளனம் செய்வது தப்பல்லவா? ஆறு, குளங்கள் உள்ள ஊர்க்காரர்களுக்குக் கூடத்தான் மழையின் தயவு வேண்டும். மனிதன் என்றால், மானம்தான் பார்க்கவேண்டும். இரண்டு மானத்தையும்தான்—ஒரு 'மானத்'தை வயிற்றிற்காகவும் மற்றொன்றை ஜீவனுடைய தீராத பசியாகிய கௌரவத்திற்காகவும்........

மழைக்குக் கொடும்பாவி இடத்தில் ஏன் அவ்வளவு பயம்? ஆனால் பயமென்று எப்படிச் சொல்லலாம்? அனுதாபமாயிருக்கலாம்; அல்லது குடியானவர்கள் சொல்வதுபோல், சூரியனுடைய காதல் கட்டழகியாகிய கொடும்பாவியின் மீதுள்ள போட்டிப் பிரேமையாயிருக்கலாம்.

எப்படி இருந்தாலென்ன? இதோ மழை வந்து விட்டது. ஜில்லென்று தாமரைத் தண்டுகள் தொடுவது போல் மேலே காற்று வீசுகிறது. வானம் மைக்கரியாகிவிட்டது. நக்ஷத்திரங்களெல்லாம் வழி தெரியாமல் விழுந்து விட்டன. அடடா! வானில் என்ன கத்தி விளையாட்டு! என்ன இடி முழக்கம்! கொல்லைப் புறத்திலிருந்து தவளைகள் தங்கள் தெய்வத்தை வர வேற்பதற்காக முறை வைத்துப் பாட ஆரம்பித்து விட்டன. எவ்வளவு தினிசுகள்!—வேதபாராயணம், தடுக்குப் பேச்சு, எந்திரம் அறைத்தல், கிஞ்சிரா, மிருதங்கத்தின் ஒலி, ஒற்றைக் குரல், அதிகாரக் குரல், அடடா! வர்ணிக்க வார்த்தை எனக்குத் தெரிந்தாலல்லவா!........

(3) மனித ஹ்ருதயம்

மழைக்காலம் ஆரம்பித்து விட்டது. மக்களின் மனம் கொஞ்சம் குளிர ஆரம்பித் திருக்கிறது. வறட்சையால் தவித்த செடி, கொடி பயிரினங்களும் பஞ்சம் வருமோ என்று ஏங்கிய ஜனங்களும் கொஞ்சம் உயிர் பெற்றிருக்கிறார்கள். பச்சைப் பசேலென்று வயல்கள் சிரித்துச் சிரித்து ஆடுகின்றன. குடியானவர்கள் மழைத் தெய்வத்தைக் கும்பிடுகிறார்கள். நமக்கும் வெகு ரம்மியமாகத்தானிருக்கிறது.

ஆனால்—, இந்த எழவு ஆனாலைச் சொல்லு! எந்த நல்ல விஷயத்திலும் ஒரு நொடிக்குள் விஷத்தை திணித்து விடுகிறதே அதன் பிரபாவத்தைப் பார்!....ஹூம்! அதற்கு நாமென்ன செய்யலாம்.

மழையில் நன்மையென்றேனல்லவா? அதனாலேயே பலருக்குத் துன்பம் விளைகிறது தெரியவில்லையா? எவ்வளவுதான் வெயில் கொளுத்தி, கால்களில் 'பொடி' ஒட்டிக்கொண்ட போதிலும் "நல்லா வெயில் கொளுத்துது" என்று மட்டும் சொல்வார்கள். ஒருக்கால் சற்று இளைப்பாறுவார்கள். ஆனால் சேர்ந்தாற்போல் இரண்டு மூன்று நாள் மழைமட்டும் பொழிந்து விட்டால் உலகம் தவியாய்த் தவிக்கிறது. கூரை வீடுகளுக்கும், மண் சுவர்களுக்கும் காலம் நெருங்கிவிடுகிறது. ஏழைகள் வீடெல்லாம் ஒரே ஒழுக்கு. வீட்டிலிருக்கும் குடியானவனோ வண்டிக்காரனோ கொசுவோடும் மாடுகளோடும், சாணியோடும், மழை ஜலத்தோடும், குழந்தைகளோடும் திரும்ப இடமில்லாமல் வீட்டில் தத்தளிப்பது பார்க்க சஹிக்காத காட்சி. இதற்குக் கதிமோக்ஷமேது? ஒருவேளை பிரளயகாலத்தில்தானோ?

ஏழைகளுக்கு இப்படிப்பட்ட கஷ்டம். பணக்காரர்களுக்கும் இது மஹா கஷ்டந்தானாம். "என்ன சார்! டென்னிஸ்தான் இல்லை. ஹாலுக்குப் போய் ஒரு ஆட்டம் 'பிரிட்ஜ்' போடுவோமென்றால், போக முடியாதுபோ

விருக்கிறதே. தரித்திர மழை!" என்கிறார் ஒரு பணக்காரர்.

மனிதனின் மனப்போக்கைப் பாருங்கள்! இறந்து போனவனுக்காக உறவினர் துடிதுடித்துக் கொண்டிருந்த பொழுது, விராட்டிக்காரன் தேய்ந்த காசு கொடுத்ததற்கு ஒப்பாரி வைத்தானும் என்ற கதைபோ லிருக்கிறது. டென்னிஸ், பிரிட்ஜ் பிரபுக்களுக்கும் விராட்டிக்காரனுக்கும் என்ன வித்யாசம்?

(4) அதிசயம்.

"ஆமாம் கலியுகத்தில் ஏது அதெல்லாம்? கிருதயுகத்தில் உண்டு. துவாபரயுகத்தில் உண்டு. புராணங்களில் படித்திருக்க வில்லையா? ஒருத்தி அந்த நாளில் மணலால் குடம் செய்தாளாம். ஒருத்தி சூரியனை உதிக்கவொட்டாமல் தடுத்தாளாம். இன்னும் எத்தனையோ அதிசயமும் தெய்வீக நிகழ்ச்சியும் அப்பொழுது. இப்பொழுது ஏது, பாழும் கலியுகத்தில்?"

இதைப் போலப் பலர் பேசுகிறார்கள். அதைக் கேட்கும் பொழுதெல்லாம் எனக்கு வியப்பு உண்டாகிறது. பாவம்! மனக்கோயிலில் வெளிச்சமில்லா விட்டால் எப்பொழுதும் நடக்கும் தெய்வ லீலையை எப்படி அறியமுடியும்? யார் ஜாலத்தால் அதோ தெரியும் நக்ஷத்திரம் பச்சை மத்தாப்பூப்போல் எரிகிறது? பைத்யம் பிடித்த மனிதனைப் போல் திடீரென்று நக்ஷத்திரங்கள் சஞ்சாரத்திற்குக் கிளம்பிவிட்டால் நம் கதியென்ன? சூரியன் எண்ணெயில்லா விளக்குப் போல் அவிந்து விட்டால் உலகு எப்படி இருக்கும்? நமது ஐம்புலன்களும் ஒற்றுமையாக வேலை நிறுத்தம் செய்துவிட்டால் யார், கெஞ்சினாலும் என்ன செய்ய முடியும்? அல்லது கொல்லையிலுள்ள மாமரம் வெகு நாளாய் நின்று தவம் செய்ததின் ஆயாசத்தைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டுக் கிளம்பி நடுத் தெருவில் வந்து பள்ளிகொண்டு விட்டால்? திரேதா யுகத்தைப் பார்த்ததுபோல் பேசுபவர்கள்கூட என்ன செய்ய முடியும்?........

தம்பீ! வித்தையாடி படுதாவிற்குப் பின்னால் இருக்கிறான். அவன் அனாதி; அவன் ஜாலமும் அனாதி. அவனுக்கும் அவன் ஜாலத்திற்கும் எல்லையில்லை. அவன் தராசைப் போன்றவன். யுகபேதம் அறியாதவன். பக்ஷபாத மற்றவன். அவன் ஆணைக்கு அடங்கி எனைக்கும் புல் முதல் நக்ஷத்திரங்கள் வரை தங்கள் தங்கள் தருமத்தை நடத்துகின்றன. (மனிதன் மட்டும் விதி விலக்கு!) அவனிடமிருந்தே பிரகிருதியின் விநோதமும் ஆனந்தமும் துன்பமும் உதிக்கின்றன. இன்றைக்கும் நாளைக்கும் அவனுடைய தூய கைகளையும், சூத்திரக் கயிறுகளையும் கண்ணுள்ளவர்கள் காண்கிறார்கள். நிமிஷத்திற்கு நிமிஷம் புதுமை, தெய்வீகம்! உலகும் உயிருமே பரம அதிசயம். கிருத யுகத்துடனும், துவாபார யுகத்துடனும் போகவாவது ஐயா! தள்ளும் அத்தைப் பாட்டிப் பேச்சை!

மகாத்மா காந்தி எழுதிய

ஹரிஜன மலர்கள் (மகாத்மா ஹரிஜன விஷயமாக வெளியிட்ட அறிக்கைகளின் மொழி பெயர்ப்பு)

ஹரிஜன சேவை	0	0	6
ஹரிஜனத் தொண்டு	0	0	6
ஹரிஜனப் பணி	0	0	6
ஹரிஜன விமோசனம்	0	0	6

சுதந்திரச்சங்கு புத்தகசாலை
பைக்கிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, சென்னை.

தி யுனைடெட் இந்தியா லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

தலைமை ஆபீஸ் மதருஸ். 1906ல் ஸ்தாபிக்கப்பட்டது.

டிரஸ்டி:—சென்னை அபிஷியல் டிரஸ்டி.

2 கோடி ரூபாய்களுக்கு அதிகமான பாலிஸிகள். 55 லக்ஷத்திற்கும் அதிகமாகவே ஆஸ்தி.
12 லக்ஷத்திற்கும் மேலாகவே வருட வருமானம்.

இக்கம்பெனிக்கு உண்டான விசேஷ லக்ஷணங்கள் பலவற்றுள் ஒரு சில:—

இக்கம்பெனியின் நிதி பூரண நம்பிக்கையுள்ள வகையிலிருக்கிறது.

இது ஜரூராகவும் பக்ஷபாத மின்றியும் பாத்யஸ்தர்களுக்குப் பணம் கொடுக்கிறது.

இதில் சிக்கனமான நிர்வாகம் நடக்கிறது.

மட்டான சந்தா, அவைகளுடன் கூடி திருப்திகரமான போனஸ் பணம்.

பாலிஸிதாரர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் சித்தமாகவும், வெகு திறமையுடனும், தயவோடும் செய்து தருகிறது.

பூரண விவரங்களுக்குத் தலைமை ஆபீஸிற்கோ, அல்லது நாட்டின் பல பாகங்களிலும் உள்ள எங்கள் கம்பெனிப் பிரதிநிதிகளுக்கோ எழுதித் தாமதமின்றித் தெரிந்து கொள்ளலாம்.

"யுனைடெட் இந்தியா அஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்"
செம்புதாஸ் தெரு, சென்னை.

M. K. ஸ்ரீனிவாசன்,
மானேஜிங் டைரெக்டர்.

அபூர்வப் பஞ்சாயத்து

("மாயா" எழுதியது.)

"மாடு—நாலுகால், ஒரு வால், இரண்டு கொம்போடு கூடிய ஒரு மாடு—வெறுங் கால்நடை, வாய் திறந்து பேசுமா, பேசிற்று? என்ன விந்தை!" என்று ஆச்சரியப்படப் போகிறீர்கள். மாடு, மாடேதான், பேசிற்று; தங்களிடமும் பேசும். ஆனல்.......உஸ்ஸ்! இதுதானே என் பேனவின் கோளாறு. சில சமாசாரங்களைப் பொத்திப் பொத்தி வைத்திருந்து, கொஞ்சம் கொஞ்சமாக, ஊரையெல்லாம் சுற்றி வளைத்த பிறகே, மூட்டையை விட்டு அவிழ்க்கவேண்டியது மெத்த அவசியம். இப்படியிருக்க, என் சிந்தையினின்றும் எண்ணம் வெடிப்பதற்குள்ளேயே, பேனவிலிருந்து இங்கி வெளியே வந்து, காகிதத்தில் குதித்து, என் ரகசியத்தை ஆரம்பத்திலேயே அம்பலம் செய்து விடப் பார்க்கிறது. ஆனல், இன்று நான் கொஞ்சம் முன் ஜாக்கிரதைப்பட்டு விட்டேன். என்னுடைய விசேஷத் தடை யுத்தரவுக்குப் பேன கீழ்ப்படிந்துவிட்டது. எனவே மாடு பேசிய விவரத்தை இனிச் சொல்லுகிறேன். ஆனல், அதன் மர்மத்தை மட்டில் கடைசியில்தான் வெளியிடப் போகிறேன். இந்த விஷயத்தில் ஆசிரியனகிய அடியேன் தீர்ப்பே முடிவானது என்பதைக் கண்டிப்பான முறையில் வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நிற்க,

[இங்கே பேன சற்றுச் சிரம பரிகாரம் செய்து கொள்ளுகிறது. வாசகர் ஐந்து நிமிஷம் வெளியே உலாத்திவிட்டு வருவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இது 'இன்டர்வல்.']

மேலே தீயைக் கக்கிக்கொண்டிருக்கும் ஜ்வாலாகார கோளம். (இதற்குக் கொடும் வெயில் பொழியும் கதிரவன் என்பது தூய தமிழ். ஆனல் இந்தத் துபாஷ் வேலையை இதற்குப் பின் தாங்களே செய்துகொள்ளுவீர்களாக.) மேலே அப்படி. கீழே நெல் போட்டோல் பொறி பொறியும் சுடுமணல், நாலு திசையும் கண்ணுக்கெட்டிய மட்டில் பசுமையே காணுத பெரு வெளி. நடுவே ஒரு அழகான மைனர் வண்டி. அதற்குள்ளே அடியேன். திண்டுத் தலையணைகளில் உல்லாசமாய்ச் சாய்ந்து, சர்வ கலைகளையும் தனக்குள்ளேயே அடக்கிக்கொண்டு மிளிரும் ஒரு சிறிய அருமையான பத்திரிகையை வரிவரியாய்ப் படித்து ஆனந்தப் படுகிறேன். இப்பொழுது திடீரென்று "ஹே! மானுடா! வண்டிக்குள்ளிருக்கும் மனிசா!" என்று ஒரு புதுமையான குரல் கேட்டது. அதே சமயத்தில் பூகம்பம் ஏற்பட்டதுபோல் ஒரு குலுக்கல். வண்டிக்குள்ளேயே இரண்டொரு அங்கப் பிரதட்சணம் நடந்த பிறகு, அலறிப் புடைத்துக் கொண்டு, நிமிர்ந்து உட்கார்ந்தேன். இதற்கு முன் எத்தனையோ பேர் "என்ன அதிசயம்!" என்று உங்களிடம் அளந்திருப்பார்கள். அதையெல்லாம் நம்பவேண்டாம். ஆனல், இங்கேதான் "என்ன அதிசயம்!" என்பது ரொம்பப் பொருத்தமானது. ஆகையால், என்ன அதிசயம்!

வண்டியில் கட்டியிருந்த மாடு வண்டியை விட்டு விலகி நின்று பலத்த குரலில் பேசுகிறதய்யா! வண்டி யோட்டி அங்கமுத்து, பஞ்சாக்கினி மத்தியில் தவம் செய்வது போல், சாட்டையை ஒருபுறம் எறிந்துவிட்டு, மௌனமாய் நிற்கிறுன். எனக்குத்தான் கவலை; அவனுக்கு எவ்விதக் கவலையும் இல்லையெனத் தோன்றிற்று. அலட்சிய புருஷன்!

மாடு சொல்லுகிறது:—"மிஸ்டர் மைனர்! இப்பொழுது உமக்கு ஒரு பெரிய உத்தியோகம் கிடைத்திருக்கிறது. எனக்கும் வண்டிக்காரனுக்கும் ஒரு விவகாரம், நீர் அதில் பஞ்சாயத்துப் பண்ணி, ஒரு விதாயம் செய்ய வேண்டும்—அம்-ம்-ம்-மா!—" என்று கனைத்துக்கொண்டது.

"நானு? பஞ்சாயத்தா?"

"ஆம்; பஞ்சாயத்துத்தான். நீரும் இவ்வளவு தூரம் உடம்பு நலுங்காமல் பிரயாணம் செய்தீரல்லவா?" என்ற மாடு மறுபடியும் ஒருமுறை "அம்மா" என்று கத்தி, தொண்டையைச் சரிப்படுத்திவிட்டு, காதுகளைப் படபடவென்று அடித்துக்கொண்டது.

"நானும் எத்தனையோ வண்டியை இழுத்திருக்கிறேன்; எவ்வளவோ வண்டி யோட்டிகளிடமும் இருந்திருக்கிறேன். ஆனல், இந்த அங்கமுத்துவைப்போல் கொடிய, அக்கிரம, ஏமாற்றுக்கார மனிதனைப் பார்த்ததேயில்லை" என்ற மாடு, அங்கமுத்துவை நோக்கி, தனது கொம்புகளை ஒரு ஆட்டு ஆட்டிற்று. நான்கூடப் பயந்து போனேன். அங்கமுத்து சிரித்துக்கொண்டே நிற்க, இரண்டு பற்களை யிழந்த அவன் பொக்கை வாயினின்று 'ஷ்ஷ்' என்ற ஒரு சத்தம் மெதுவாகப் புறப்பட்டது.

மாடு மேலே சொல்லுகிறது:—"பாருங்கள், அவன் அகங்காரத்தை. வேறு யாராவதாயிருந்தால் ஒரே முட்டாய் முட்டிக் கொந்தி யெறிந்திருப்பேன். இவனிடம் என்னவோ என்னை யறியாமலே ஒரு பிரியம் ஏற்பட்டிருக்கிறது என்பதற்காக, என்னை என்ன வேண்டுமானுலும் செய்வதா? எவ்வளவு தூரம்தான் இழுப்பது வண்டியை. காலையில் ஒரே ஒரு பிண்ணக்குக் கட்டியையும் இரண்டு மரக்கால் ஜலத்தையும் போஜனம் பண்ணியதோடு எவ்வளவு நேரம், இந்தக் கொளுத்தும் வெயிலில் நடப்பது! காதை அடைக்கிறது. இப்படி உழைக்கிறேன். இதோ பாரும், நீர்—"

இப்படிச் சொல்லிய மாடு, சற்றுத் திரும்பி, பின்னங்கால் சப்பையில் பட்டிருந்த, ஒரு சவுக்கடிக் காயத்தைக் காட்டிற்று.

"இவ்விதமா அடிப்பது! இத்தனை நாழி நான் ஏமாந்து ஏமாந்து ஓடி வந்தேன். இனிமேல் முடியாது. நான் இங்கேயே படுத்துக்கொள்ளப் போகிறேன்" என்று, முன்னங் கால்களை முடக்கிவிட்டது மாடு.

"மாட்டின் கட்சி முடிந்ததா?" என்று மெதுவாக வினவினுன் அங்கமுத்து. அப்பொழுது அவனைப் பார்த்த போது, 'கிர்' என்று என் மனத்தை அவனிடமிருந்த ஏதோ ஒரு சக்தி இழுப்பதுபோல் தோன்றிற்று.

"ஆம், அப்பா—மண்டை வெடிக்கும்போ லிருக்கிறதே. ஏன் அங்கே வெயிலில் நிற்கிறுய்? இப்படி வண்டிக்குள் வந்து சற்று உட்காரேன். கொஞ்சம் புளகு வெற்றிலை போடுகிறுயா?" என்று பரிவோடு கேட்டேன்.

ஜிலுஜிலு வென்ற ஒரு நயமான சிரிப்போடு, "வேண்டாம், ஐயா! அதெல்லாம் உங்களைப் போன்ற சுக ஜீவிகளுக்கு. எனக்கும் மாட்டுக்கும் சொகுசு வேறேயா? நாங்கள் உழைக்கப் பிறந்தவர்கள்" என்று அவன் சொன்னபொழுது, அவனுடைய உச்சிக் குடுமி, வானை நோக்கி, சற்றுச் சிலி சிலிர்த்து நிமிர்ந்தது.

"அது கிடக்கட்டும். எதிர் வழக்காடுகிறாயா; குற்றத்தை ஒப்புக்கொள்ளுகிறாயா?"

அங்கமுத்து சொல்லுகிறான்:-"செய்தால் ஒப்புக்கொள்ளுவதில் எனக்கொன்றும் தடை கிடையாது. ஆனால், செய்ததாக, என் மனசுக்கு எட்டிய மட்டில் தெரியவில்லை. நானும் என் செல்ல மாட்டைப் போலவே, என் கட்சியை ஆரம்பிக்கமுடியும். நானும் எவ்வளவோ மாட்டை, எந்தெந்த இடமெல்லாமோ ஓட்டி யிருக்கிறேன். என்போன்ற வண்டிக்காரர்களெல்லாம் என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா? நான் கோழை மனசுக்காரனாம். மாட்டை அதிகப் பிரியமாக நடத்துகிறேனாம். தார்ப்போட்டாலொழிய, மாடு நடக்கவே நடக்காதாம். பத்து கஜத்துக்கொரு தடவை திரும்பத் திரும்பச் சாட்டையடியும் தார்க்குத்தும் விழுந்தால்தான், எந்த மாடும் நடக்குமாம். நானோ சொப்பை தட்டுகிறேன். தண்ணீர் கண்ட இடத்தில் காட்டுகிறேன். புல் கண்ட இடத்தில் அவிழ்த்துவிடுகிறேன். தனி நொடியாயிருந்தாலும், நான் எவ்வளவு இடத்தில் பார் பிடித்துத் தள்ளி யிருக்கிறேன்; உமக்குத் தெரியாதா? பேசாமலிருக்கிறீரே? இந்தக் கொடும் வெயிலில் ஆமை கதியில் ஊரலாமா? இன்னும் அரை நாழிப்போது, காலைச் சற்று எட்டிப்போட்டு நடந்தால், ஒரு தோப்பைக் காணலாம். என்னை நம்பினால், நிச்சயம் சுகம் அனுபவிக்கலாம். மாடு புல் மேயலாம்; நீர் காற்று வாங்கலாம்; நானும் சற்று நிம்மதியாய் உட்கார்ந்து எங்கள் குல தெய்வத்தின்மேல் ஒரு தெம்மாங்கு பாடுவேன்."

அவன் சொல்லுவது ரொம்ப நிஜம் என்று பட்டது.

"போதுமப்பா, முத்து—மாடே, கேட்டாயா? குற்றவாளி நீங்களல்ல—" என்ற நான் கீழே இறங்கினேன்.

பிறகு சொல்லலானேன்:—"உண்மையில், நான்தான் குற்றவாளி. ஏதோ உப்பரிகையில் இருப்பதுபோல் நினைத்துக்கொண்டு, மாடே, உன் சிரமத்தையோ, அங்குவே, உன் கவலையையோ கொஞ்சம்கூடக் கவனிக்காமல், என் பாரத்தைச் சுமத்தி விட்டேன். இந்த மணல் வெளியைத் தாண்டும் வரையிலாவது, கண்டிப்பாக வண்டியில் நான் உட்காரப்போவதில்லை. சுகஜீவி என்ற கெட்ட பெயரை இன்றே, அதுவும் இன்னே, பின்னும் இவ்விடத்தே மாற்றிக்கொண்டே தீர நிச்சயித்துவிட்டேன். சரி, வண்டியைப் பூட்டு.—"

இவ்வாறு சொல்லி, ஒரு சக்கரத்தடியில் போய் நின்று, சக்கரத்தின் ஆரத்தைப் பிடித்து உந்த, சித்தமாய் நின்றேன்.

மாடு பேசாமல் எழுந்தது. அந்தக் கிழ அங்கமுத்து, குறும்புக்காரச் சிரிப்புடன், மூக்கணையைத் தூக்கினான்.

"ஆஹா! அற்புதம்! கதை எவ்வளவு நன்றாயிருக்கிறது! இவ்விடத்தோடு நிறுத்திவிடவேண்டும்" என்று ஒரு ரஸிகர் கூக்குரல் போடுகிறார். ஆனால், ஒரு கலா நிபுணருக்காகப் பார்த்தால், 'அரையணாவுக்குப் போன நாணயம் ஆயிரம் கொடுத்தாலும் திரும்பி வருமா?' பல்லாயிரக்கணக்கான நண்பர்கள் தமிழ் நாட்டின் நாலா திக்கிலும் தினந்தோறும் எனக்குப் பெருகி வரும் இந்தச் சமயத்தில், ஆதரவுக் கடிதங்களும் அனுதாபச் செய்திகளும் ஏராளமாக வந்து குவிவதற்கு அங்கங்கே ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கும் இந்த வேளையில், நான் வாக்குப் பிறழவே கூடாது. கட்டுரையின் ஆரம்பத்தில் நான் தந்த வாக்குத்தத்தத்தை, கதாரசத்தில் மூழ்கிவிட்ட வாசக நண்பர்கள் மறந்திருப்பார்களென்றால்தான் என்ன? அதற்காக, மாடு என்னமாய்ப் பேசிற்று என்ற ரகசியத்தை நான் வெளியிட்டுச் சொல்ல வேண்டாமா? சிவன் நெற்றிக் கண்ணைத் திறந்தார்; மன்மதன் எரிந்து போனான். நான் என் கற்பனைக் கண்ணைத் திறந்தேன்; மாடுமரமெல்லாம் பேசத் துவங்கிவிட்டது. வாசகரின் சந்தேகம் இப்பொழுது ஐயந்திரிபாடுகள் அற, அகன்றோடி யிருக்குமே.

Have your Majestic figures at
R. DASEN'S ELECTRIC PHOTO STUDIO.
"The Best" and most up-to-date stail and finish.
Artists & Bromide Enlargers & Oil Painters.
55, Rattan Bazaar Road,
G. T., MADRAS.

தேவை

நெல் மெஷினுக்கு குமாஸ்தா தேவை. விவசாயம் தெரிந்தவரா யிருக்கவேண்டும். செங்கல்பட்டு தாலூகாவில் வாசம்செய்ய தனிவிடுதி. செக்கூரிடி 100/- மாதச் சம்பளம் 15/-

மானேஜர்

13. மார்ஷல்ஸ் ரோட், எழும்பூர், சென்னை.

30 வருட பிரக்யாதி

டாக்டர் ஜம்மி

வெங்கடரமணய்யாவின்

மருந்து

ஈரல், குலைக்கட்டி கோளாறென்னும் கொடிய நோயால் வருந்திக்கொண்டிருந்த எண்ணிறந்த பல குழந்தைகளைக் காப்பாற்றியிருக்கிறது. அநேக வீடுகளைப் பொலிவுறச் செய்திருக்கிறது. இம்மருந்து எல்லா கெமிஸ்டுகளிடமும் கிடைக்கும்.

8, சாலைத் தெரு, மயிலாப்பூர் சென்னை.

தமிழ்ப் பாட்டிகள்

(ஆயில்யத்தின் அபிப்பிராயம்.)

சலனப் படக்காட்சியை 'ஸினிமா' என்று சொல்கிறார்கள். 'டாக்' (Talk) அதாவது பேச்சுக் கலந்த சலனப் படங்களை 'டாக்கி' என்று ஆங்கிலத்தில் சொல்கிறார்கள். அந்த விதியை யொட்டிப் பாட்டு மிகுந்த சலனப் படக் காட்சியைப் பாட்டி என்று தமிழில் கூப்பிடுவது சரியென்று எனக்குத் தோன்றுகிறது. பேச்சு மிகுந்த சலனப் படக்காட்சியைப் பேச்சி என்று பெயரிடுவது சரியானதே. பிறர் அப்படி அழைத்தாலும் சரி, அழைக்கா விட்டாலும் சரி, நான் பாட்டி பேச்சி என்ற பெயரோடுதான் இக் கட்டுரையில் அவைகளைப் பற்றி எழுதப்போகின்றேன்.

தவழ்ந்து கொண்டிருந்த ஒரு குழந்தை திடீரென்று தலையைத் தூக்கிப் பிரசங்கம் செய்ய ஆரம்பிப்பது வேடிக்கையா யிருக்கலாம். ஆனால் அந்தச் சின்னக் குழந்தை வரிசையாக "மாமா, தாதா, பாபா, காகா" என்று சொல்லிக் கொண்டிருக்குமேயன்றி, ஆயுதப் பரிகரணத்தைப் பற்றியோ கம்பனின் கவிச் சிறப்பைப் பற்றியோ பேசுமென்று எதிர்பார்க்க முடியாது. தமிழ்ப் பாட்டிகளின் நிலைமையும் அவ்வாறுதான். சுமார் ஐந்தாறு வருஷங்களுக்கு முன்புதான் சலனப் படங்களைத் தயாரிக்கத் தென்னாட்டிலும், முயற்சிகள் செய்யப்பட்டன. தவழ்ந்து கொண்டிருந்த ஒரு பாப்பா ஸர்வ கலா சாலைப் பிரசங்கம் செய்ய ஆரம்பித்த கதைபோலத் திடீரென்று பேச்சி தயாரிக்கவும் பாட்டி தயாரிக்கவும் ஆரம்பித்தார்கள். ஸினிமாத் தயாரிப்பதிலேயே 'ஸைபர்' மார்க் வாங்கிக் கொண்டிருந்தவர்கள் திடீரென்று பேச்சியையும் பாட்டியையும் தயாரிக்க ஆரம்பித்தால் அது எப்படியிருக்கும்? இப்போது இருப்பது போலத்தான் இருக்குமன்றோ!

எனக்குச் சுதேசிப் பித்தம் அதிகம். உண்பது, உடுப்பது, பார்ப்பது, கேட்பது எல்லாவற்றிலும் சுதேசி வஸ்துக்களுக்கே ஆதரவு தர வேண்டுவது எனது ஆசை. ஆகவே ஏதோ மாதத்துக் கொரு முறை நான் போக நேரும் டிராமா, ஸினிமா, பேச்சி, பாட்டி முதலியவைகளும் சுதேசியாக இருக்க வேண்டு மென்று ஆலோசிப்பவன். ஆனால் அதற்காக மூளையைக் கழற்றி என் வீட்டு ஆணியில் மாட்டி விட்டுக் கொட்டகையில் போய்க் குந்திக் கிடப்பதற்கு நான் தயாரா யில்லை. படக் காட்சிகளுக்குப் போனால் அங்கு என் மனத்தில் கொஞ்சமாவது சந்தோஷ மேறுகிறதா என்று கவனிப்பதுதான் எனது வழக்கம். அன்று ஒரு தமிழ்ப் பாட்டிக்குப் போகும் துர்ப்பாக்கியம் எனக்கு ஏற்பட்டது. இரண்டு மணி நேரம் மூளை, சிந்தனாசக்தி, தெய்வபக்தி எல்லாவற்றிற்கும் லீவு கொடுத்து விட்டு உட்காரவேண்டும்போ லிருந்தது. வெள்ளைத் துணியின்மீது தோன்றிய நடிகர்களும் நடிகைகளுமே சிந்தனா சக்தியைப் பறி கொடுத்துவிட்டு வந்திருக்கும்போது நமக்கு மட்டும் வைத்துக் கொள்ள உரிமை யுண்டு. அந்தக் கொட்டகையில் அன்று பெருங் கூட்டம்தான். ஆனால் அத்தனை பேரும் சிந்தனாசக்தியை அடகு வைத்துவிட்டு வந்திருந்தார்கள் என்றே தோன்றிற்று. ஆதிகாலந் தொட்டு 1934 வரை கானடா தொடங்கி ஜப்பான் முடிய எல்லாக் காலத்திலும் எல்லாத் தேசத்திலும் இருந்த இருக்கின்ற அத்தனை மூடத்தனமும் திரண்டு இந்தக் கொட்டகைக்கு விஜயம் செய்து விட்டதோ என்று எனக்குத் தோன்றிற்று.

கும்பலுக்கோ குறைவில்லை. மாதக் கணக்காய் அந்தப் பாட்டியையே காட்டு கின்றார்கள். அப்பொழுதும் கும்பல் கூடுவது குறைய வில்லை. தூரத்திலுள்ள கிராமங்களினின்று கூட இதைக் காணக் கேட்க வருகின்றார்களாம். ஆனால் கும்பலுக்கும் உண்மையான ரஸனைக்கும் வெகு தூரம் என்பது அறிஞர் அபிப்பிராயம்.

சென்னையின் தெருக்களில் அரை நிமிஷத்தில் ஆயிரம் பேரைச் சேர்த்து விட முடியும். 'என்ன? என்ன?' என்று கேட்டுக் கொண்டே ஆயிரம் பேர் நிற்பார்கள். கடைசியில் அவ்வளவு கூட்டத்துக்கும் காரண மென்னவென்று உள்ளே சென்று பார்த்தால், ஒரு குப்பன் வீட்டு எலியைச் சுப்பன் வீட்டு நாய் அறைந்து கொன்றது என்ற குட்டு வெளிப்படும். தெருவில் போகும்போது மாமா என்று கை தட்டிக் கூப்பிட்டால் நூறு மாமாக்கள் திரும்பிப் பார்க்கிறார்கள். நாடகக் கொட்டகையில் நாற்காலியின்மீது ஏறி ஒரு திக்கை விறைத்துப் பார்த்து விட்டு உட்கார்ந்து விட்டானானால், எத்தனை பேர் பெஞ்சியில் ஏறி ஏறி அந்தத் திக்கையே நோக்குவார்கள் தெரியுமா? இதெல்லாம் கும்பலின் லட்சணங்கள். ஆகவே கும்பல் சேருகிறதே யென்று ஏமாந்து போவதற் கில்லை. ரஸனை வேறு; கும்பல் வேறு. அவ்வளவு கும்பல் வந்ததே யென்பதற்காக அந்தப் பாட்டிப் படம் நன்றா யிருந்ததாகச் சொல்ல நான் தயாரா யில்லை. இது பணம் சம்பாதிக்கச் சாமர்த்தியமான 'தொழில்' என்று சொல்வதற்கு நான் தயார். ஆனால் இதைக் கலையபிவிர்த்தி என்றோ ஜனங்களின் அறிவைப் பண்படுத்தக் கூடியதென்றோ, கொஞ்சம் கூடச் சொல்வதற்கில்லை.

அறிவு நிறைக்கும் சொற்கள், அன்போ, ஆவேசமோ ஊட்டும் பாக்கள், கண்ணுக்குக் குளுமையான காட்சிகள் இவைகளைக் காணலா மென்று போனால், வெறும் சதை மணக்கும் உருவங்களும் சகதி போன்ற பேச்சுக்களும் தோன்ற, தொண்டை நடத்தும் சண்டைகளுக்குப் 'பாட்டுக்கள்' என்று பெயரும் வைத்திருந்தால், அவைகளை எப்படிச் சகிப்பது?

ஜனங்களை இந்தத் தேசத்தில் வசியம் செய்வதற்கு, 'தெய்வீகம்' சிறந்த வியாபாரப் பொருளாக இருக்கிறது. புத்தகங்களில் கூறப்பட்டுள்ள பகவான் கண்ணனையும், கார்த்திகேயப் பெருமானையும், பராசக்தியையும் படத்திலாவது கட்டாயம் பார்த்து விடவேண்டுமென்பது அநேகருக்கு ஆசை. தலையில் ஒரு மயில் ரெக்கையையும், கையில் ஒரு வேலையும் தூக்கிக் கொண்டு வந்து குதிப்பவர்களைத் தெய்வங்களின் வேடங்களென்று எண்ணுவது தெய்வாபராதம் என்றுதான் தோன்றுகிறது. தெய்வங்கள் காமப்பித்துக் கொண் டலைந்ததாகவும், ஆபாசமான

அன்னாவின் கதை

(" இராஜாத்தி "யின் கடிதம்.)

என் பிரிய ரங்கநாயகிக்கு,

இப்ப இப்ப, நீ ரொம்ப யோசனைக் காரியாகி விட்டாய். ஆனால் ஒரு சமாசாரம் சொல்லுகிறேன்; நீ கோபித்துக் கொள்ளாதே. உனக்கு அவ்வளவு யோசனை ஒத்துக் கொள்ளாதம்மா! நீ குழந்தை மனசு படைத்தவள். பூப் போன்ற உள்ளம். வெளுத்ததெல்லாம் பால் என்று நினைப்பவள். அப்படிப் பட்டவளுக்கு நான் என்ன சொல்லுவது? எல்லாவற்றையும் எட்டவிருந்து பார்த்துக் கொண்டிரு. 'தூரத்துப் பச்சை கண்ணுக்கு இனிமை.' என் போல் பல கஷ்டங்களையும் அனுபவித்து, ஈடு கொடுத்து வெளி வந்தவர்களுடைய யோசனையைக் கேட்காமல், எதையும் நெருங்கி அனுபவிக்க ஆசை கொள்ளாதே. நான் இப்படிச் சொல்லுகிறேனென்று என்மேல் வருத்தப்படாதே. சற்று யோசிக்க ஆரம்பித்தால், புறத்தேயுள்ள உண்மை உன் போன்றவர்களுக்கு விளக்கமாவதில்லை. தங்கள் மனசையே கஷ்டப் படுத்திக் கொள்ளுகிறீர்கள். நீங்கள் தொட்டாற் சுருங்கிகள்.

உனக்குத்தான் ருஷ்ய ஞானி டால்ஸ்டாயைப் பற்றித் தெரியுமே; அநேகந் தடவை சொல்லி யிருக்கிறேனே. நமது மகாத்மா காந்தியால்கூடப் பூஜிதையாய்ப் பேசப்படும் அந்தப் பெரியார், ஒரு பிரசித்தமான கதை எழுதி யிருக்கிறார். அதுதான் அன்னா கரேனினா என்ற நாவல். நீ அன்னாவின் இனத்தைச் சேர்ந்தவள் என்றால் மனங் கலங்கிவிடாதே. 'கற்பை யிழந்த அந்தப் பெண்ணுடனா என்னைச் சேர்ப்பது?' என்று பல்லைக் கடிக்காதே. மிருதுவான நாரைக் கொண்டு தொடுத்த மல்லிகைப் புஷ்பம், மாலையிலே தரித்து நிற்கிறது. சன்னமான கெட்டி நூல் மலரை யிறுக்கினால், அது காம்பு அறுந்து இற்று விழுந்து விடுகிறது. மலர் இரண்டும் ஒரே இனத்தைச் சேர்ந்தவைதான்.

முதன் முதலில் அன்னாவைக் கண்டபோது, அவள் எப்படி யிருக்கிறாள்? உண்மையில் அன்னா வெறும் கதாபாத்திரமா யல்ல, உயிர் பெற்ற பதுமையாகவே விளங்குகிறாள். அது கிடக்கட்டும். அன்னாவின் முதல் பிரவேசம், களங்கமற்ற அன்பு, தெய்வ பக்தி, லளிதம் இவற்றைத் திரட்டிப் பிடித்துவைத்த ஓர் தேவதா ரூபத்தின் தரிசனமாகவன்றோ இருக்கிறது! சகோதரனுக்கும் அவன் மனைவிக்கும் வருத்தம். அன்னாவின் அன்பு மொழிகளும் அழகிய இசைப்பும் அவர்களைச் சேர்த்து வைக்கிறது.

இந்த அன்னாவைச் சில நாள் கழித்து, அவளுடைய சொந்த வீட்டில் சென்று பார் அவள் உள்ளத்தே யிருக்கும் அக்நி அவிந்து கிடக்கிறது; தூண்டுவோரில்லை. கணவன் கரேனின், ரொம்ப ரொம்ப லௌகிகம் தெரிந்தவன்தான். ஆனாலுமென்ன? கச்சேரி, கடிதாசு, பெரிய மனித தர்பார், வேதப் புத்தகம், கடவுள் இவைகளில் அவன் உழலுபவன்தான். கடமை; அதற்காகவே அவன் அவற்றில் முடங்குகிறான். ஆசை, உள்ளத்திலே பொங்கியெழும் அனல், இல்லை. சில அம்மாமிகள் இல்லையா? உளுத்தம் பருப்பு, அடைத்த புளி, அப்பளாம், வைர அட்டிகை, கரியடுப்பு, காப்பிப் பாத்திரம், சீப்பு, தைலம், குழந்தை குட்டிகள் இந்தச் சாமான்களை ஆண்டு ஆளுவதோடு வாழ்க்கை முடிந்துவிட வில்லையா இவர்களுக்கு? இந்த மாதிரிதான் கரேனினுக்கும் கச்சேரியும், கடிதாசும், பைபிளும். அழகான, திருப்தியோடு கூடிய வாழ்க்கைதான். ஆனால், அன்னா ஒரு மென்மையான புஷ்பச் செடி. மலர் பூக்கும் செடியைத் தெளி தண்ணீரின்றி வாட விடலாமோ?

அன்னாவின் மனத்தை, அந்நிய மனிதன் ஒருவன், தான் செய்வது தனக்கே புரியாமல், கலக்கி விட்டான். தவறும் நிகழ்ந்து விட்டது. நீண்ட கதையை—இன்னும் எவ்வளவு வேண்டுமானாலும் நீளக்கூடிய கதையை—பூர்த்தியாக நான் எப்படிச் சொல்ல முடியும்? சில கோடிகளை மாத்திரம் காட்டுகிறேன். உள்ளம் வெளியே பறந்தோடி விட்ட அன்னா, தன் ஜீவப் புலம்பலைக் கணவனிடம் ஒளிக்காது வெளியிடுகிறாள். அந்தக் கரேனின் என்ற ஜந்து என்ன சொல்லுகிறான் தெரியுமா? கிராமங்களிலேயே, வாழ்க்கையின் சிரிப்பும் புளிப்பும் ஓய்ந்து, காலனின் வருகையைச் சாந்தமாய் எதிர்பார்க்கும் சில — எல்லாரையும் சொல்லேன்—சில முதியவர்களில்லையா? அவர்களைப் போல், எண்ணம் நலுங்காமல் பேசுகிறான்! "என்ன தவறு நடந்தாலும் சரி; வீட்டோடு அடைத்துக்கிட. ஊர் வம்புக்கு இடங் கொடாதே" என்பது அவன் உபதேசம் பாசமோ, மனக் கிளர்ச்சியோ இல்லாத இந்த மனிதன் கடவுளைப் பற்றி வேறு பேசுகிறான். மேலே என்னென்னவோ நடந்து விட்டது; அதைப் பற்றியெல்லாம் என் கேட்கிறாய்! அன்னாவின் கதை ஒரு சோகக் கதை. அதற்குக் காரணம் மனித சமூகத்தின் நடை முறைகள்தான். மனப் பொருத்த மறியாது மணப் பொருத்தம் பார்க்கும் பஞ்சாங்க மனிதர்களுக்கு அவை விளங்குவது மிக மிகக் கடினந்தான். என்ன செய்வது?

உன்

இராஜம்.

பேச்சுக்களைப் பேசியதாகவும், நாரதர் மாமாத் தொழில் செய்ததாகவும் படம் காட்டும்போது, சிலர்கள் ஒரு வேளை நாஸ்திகப் பிரசாரம் செய்கின்றார்களோ என்றுகூட நினைக்கத் தூண்டுகின்றது. தெய்வங்கள் மட்டுமல்ல, வந்திருக்கும் மனித மூளைகளுக்கும் நஷ்டமேற்படுத்து கின்றார்களே என்பதுதான் எனது கவலை.

'பாட்டு' என்ற சர்க்கஸை நாடக மேடையினின்றே தொலைத்து விட வேண்டுமென்று கட்சி புறப்பட்டுள்ள இக்காலத்தில் ஸினிமாவிலும் பாட்டை நுழைத்துப் பாட்டி தயாரிக்கின்றார்களே, இதனால் சங்கீதத்தையும் கொலை செய்கிறார்கள்; ஸினிமாக் கலைக்கும் இடையூறு ஏற்படுத்துகிறார்கள். தற்காலத்தில் தமிழ் நாட்டில் தோன்றியுள்ள பாட்டிகள் குழந்தைப் பிரசங்கமாக இருக்கிறதென்பதே எனது அபிப்பிராயம்.

Chats Behind Bars
BY
C. RAJAGOPALACHARI
Price As. 6 Postage extra

சட்டம் பெரிதா? ஜீவன் பெரிதா?

(வ. ரா. எழுதியது)

தமிழ் நாட்டில், இப்பொழுது வாழ்ந்துவரும் அருமையான கவியான பாரதிதாஸன், ஒரு இடத்தில், "பணமும் பிணமும் மண்ணிற் புதையக் கண்டேன்" என்று ஆவேசத்துடன் பாடியிருக்கிறார். மனிதன் ஜீவன் இழந்து, பிணமாய்ப் போனால், மண்ணோடு மண்ணாகக் கலக்கவேண்டியவனே.

* * *

சூரியன் உள்ள வரையில்தான், சந்திரனுக்கு மதிப்பு. சூரியன் சுயம்பிரகாசி. சந்திரன், சூரியனிட மிருந்து, ஒளியைப் பிச்சை வாங்கிப் பிழைப்பவன். மனிதனுக்கு ஜீவன் இருக்கும் வரையில்தான், அவனைச் சுற்றி யிருக்கும் பொருள்களுக்கு மதிப்பு. ஜடப் பொருள்க ளாகிய சந்திரர்களுக்கு, ஜீவன்களாகிய சூரியர்கள் ஒளியையும் மதிப்பையும் உபயோகத்தையும் கொடுக்கிறார்கள்.

* * *

பணமானலென்ன, பிணமானலென்ன, ஒரு நிலையில், இரண்டும் ஒன்றுதான். ஒப்பற்ற வீரர்களும், உயிர் இருக்கும் வரையில்தான் வீரர்கள். மரத்துப்போனால், பிரேதக் கணக்கில் தாக்கல் ஆகவேண்டியதுதான். பிரேதங்கள் யாவும் அழுகிப் போய், துர்நாற்றம் வீசத்தான் செய்யும். பணக்காரன் பிரேதம் மணக்காது.

* * *

சவத்துக்கு, உலகத்தில் இரண்டுவிதமாக மரியாதை செய்கிறார்கள். ஒன்று மண்ணில் அடக்கம் செய்கிறார்கள் அல்லது இடுகாட்டில் தகனம் செய்கிறார்கள். குணப்படுத்த முடியாத நோய் வாய்ப்பட்ட நோயாளியைக் கொன்றுவிடுவது சிறந்த ஜீவகாருண்யம் என்பது ஒரு சித்தாந்தம். எஸ். பி. ஸி. ஏ. சபை இதற்கு அத்தாட்சி.

* * *

குணப்படுத்த முடியாத மிருகங்களை எஸ். பி. ஸி. ஏ. சபையார் கொன்றுவிடுகிறார்கள் என்பது எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம். சவத்தையும் உயிர் மிகக் குறைந்து நிற்கும் மனிதனையும் உலகத்தில் அதிகமாக மதிப்பதில்லை. மொத்தத்தில் இரண்டையும் சவங்களாகவே கருதுகிறார்கள். சவத்துக்கு உரிய உபசாரங்களைத்தான் செய்யத் தயாரா யிருக்கிறார்கள்.

* * *

பழக்கமும் சட்டமும் மனிதனுக்குத் தேவை. அவனுடைய சக்தி அழியாமலிருப்பதற்குத் தேவை. மனிதன் தினந்தோறும் ஒவ்வொரு வகை ஆகாரத்தை உட்கொண்டு வளர முடியாது, வாழ முடியாது. அதுபோலவே, நாளுக்கொருதரம் சட்டையை மாற்றுவதுபோல, சட்டத்தையும் மாற்ற முடியாது.

* * *

சட்டமும் பழக்கமும் மனிதனுடைய வாழ்வின், உயிரின் வளர்ச்சிக்காக ஏற்பட்ட, ஏற்புடுத்தப்பட்ட சாதனங்கள். பெரும்பாலும், சட்டம் என்பது மனிதனுடைய தற்காப்புச் சாதனமாகும். சட்டம் என்பது ஒருவகைப் பாதுகாப்பு நிதி; ஒருவிதப் 'பென்ஷன்.' வாழ்க்கையின் துவக்கத்திலும் நடுவிலும் பாதுகாப்பு நிதி தேவையில்லை. முடிவிலும் முடிவுக்குப் பின்னரும் தான் தேவை.

* * *

குழந்தைக்குத் தாய்ப்பால்; இளைஞனுக்கு ஜீரணமாகக்கூடிய ஆகாரம்; விலாப் பழுத்தவனுக்குப் புஷ்டியுள்ள தீவனம்; நோயாளிக்குப் பத்தியம்; கிழவனுக்கு மென்று தின்ன வேண்டிய தேவையில்லா உணவு. ஆகாரம் என்று பொதுவாகப் பேசினாலும், நிலைமைக்கும் சக்திக்கும் ஏற்றவாறு ஆகாரத்தை மாற்றிக்கொள்ளுகிறோம்.

* * *

உயிர்தான் நோக்கம்; உயிர்தான் பிரதானம். உயிரைக் காப்பதற்கும் வளர்ப்பதற்கும் உணவு. உணவைத் தின்பதற்கு உயிர் ஏற்படவில்லை. உயிரைப் போக்கும் உணவு, உணவல்ல. அது விஷம். உயிருக்கு உணவு எப்படியோ, அப்படியே, வாழ்க்கைக்குச் சட்டமும். வாழ்க்கையை உத்தேசித்துத்தான் சட்டம்; சட்டத்துக்காக வாழ்க்கை ஏற்படவில்லை, உயிர் ஏற்படவில்லை.

* * *

சட்டம் மனிதனுடைய வேலைப்பாடு, கட்டுப்பாடு. உயிர் இயற்கைத்தாயின் லீலை, குழந்தை; இயற்கைத் தாயின் ஒரு அம்சம். உணவைப்போலவே, நிலைமைக்குத் தக்கபடி, சட்டம் மாறும்; சட்டத்தை மாற்றவேண்டும். மாற்றாவிட்டால், உயிருக்கு ஆபத்து வந்து

கேசவர்த்தினி

மயிர் உதிர்வதை நிறுத்துவது.

வழுக்கை செம்பட்டை இளநரைகளைப் போக்குவது.

கூந்தலை நீண்டு செறிந்து வளரச் செய்வது.

விலை அணா 12. மேற்செலவு வேறு.

தென் இந்திய ரஸாயன சாலை, லஸ், மயிலாப்பூர்.

விடும்; வாழ்க்கை அழுகி நாசமாய்ப் போய்விடும்.

* * *

உயிரற்ற கல்லைத் தின்று, மனிதன் உயிர் வளர்வதில்லை; உயிர் வாழ முடியாது. உயிர் நிறைந்த உணவை உட்கொண்டாலொழிய, உயிர் வளர முடியாது. உயிருக்கு உயிர்தான் ஆதாரம், ஆகாரம். பழக்கத்திலும் சட்டத்திலும் உயிர் இருக்கும் வரையில்தான், அதன் மூலமாய் வாழ்வைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். சட்டம் கருங்கல்லாகச் சமைந்துபோனால், அதை உடைத்துப் பொடியாக்கி, ராஜபாட்டைக்கேற்ற கப்பிக்கல்லாக உபயோகப்படுத்திக்கொள்ளவேண்டும்.

* * *

யோசனைத் திறனில்லாத, விடுதலை ஆவேசமில்லாத கால்நடைகள் மனிதனுக்குக் கட்டுப்பட்டு, உழைத்து உழைத்து--உயிரும் இன்பமுமில்லாமல் உழைத்து—மடிந்து போகின்றன. இந்தக் கால்நடைகளைப் போலவே, சில சமயங்களில், மனிதர்கள் ஆகிவிடுகிறார்கள். உயிரை மதிக்காமல், உயிரை வளர்க்காமல், சட்ட உணவை நம்பி, ஏமாந்து, உயிரை அழித்துக்கொள்ளுகிறார்கள். சட்டமும் திட்டமும் பழக்கமும் ஆசாரமும், இந்தச் சமயங்களில், மனிதனுக்கு எமன்களாக ஏற்படுகின்றன.

* * *

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் விஷம். பகுத்தறிவில்லாமல், பழக்கத்தை, வரம்பு கோலாத பக்தியுடன், நம்பி வாழ எத்தனித்தால், உயிர், மனிதனுடைய கூட்டை விட்டு, மனிதர்களுடைய வாழ்க்கையை விட்டுவிட்டு, சொல்லிக் கொள்ளாமல் பறந்தோடிப் போகும். பறந்தோடிய விதமும் நேரமும் தெரியவே தெரியாது.

* * *

நமது ஜனசமூக ஆசாரம் என்ற சட்ட திட்டம், அமிர்த நிலையிலிருந்து விஷமாக மாறி, வெகுகாலமாகிவிட்டது. இந்த ஆலஹால விஷத்தை, தாம் உட்கொண்டு, அமிர்தத்தை வெளிக் கொண்டுவர, மகாத்மா காந்தி அரும்பாடு பட்டுவருகிறார். அவர் இப்பொழுது செய்துவருவது பாற்கடல் கடையும் வேலை. கூடிய சீக்கிரம் அமிர்தம் வெளித் தோன்றப் போகிறது.

* * *

காந்திஜீ தமாஷ்கள்

கையெழுத்துக்கு வேறு கட்டணம்

பீளமேடு கைத்தொழிற் கலாசாலைச் சொந்தக்காரர் காந்திஜீக்கு 500 ரூபாய் பண முடிப்புக் கொடுத்தார். பிறகு, காந்திஜீயின் கையெழுத்து வேண்டுமென்று ஒரு நோட்டுப் புஸ்தகத்தை அவர் நீட்டினார்.

காந்திஜீ :—"கையெழுத்துக் கட்டணம் 5 ரூபாய் எங்கே? அந்த 500 ரூபாய் கையெழுத்துக்காகக் கொடுக்கவில்லையே" என்று நகைத்துக்கொண்டே சொன்னார்.

என்றாலும், கையெழுத்தைப் போட்டார். அந்தச் சமயத்தில், ஸினிமாப் படம் பிடிக்கும் காமிரா வைத்துக் கொண்டு ஒருவர் படம் பிடித்துக் கொண்டிருந்தார். அதைப் பார்த்த காந்திஜீ "அதோ பாருங்கள், அதற்குக் கூட நீங்கள் கட்டணம் செலுத்த வேண்டும்' என்றார்.

இந்த ஸினிமாப் படக்காரர் வழி நெடுகக் காந்திஜீயைப் படம் பிடித்து வருவது அவருக்குத் தெரியாது.

காந்தி-ராமன்

உடுமலைப்பேட்டையில் ஒரு மனிதர் தமது குழந்தைக்குப் பெயர் வைக்க வேண்டுமென்று காந்திஜீயிடம் வந்தார்.

காந்திஜீ:—"குழந்தை ஆணா, பெண்ணா ?"

வந்தவர்:—"ஆண்."

காந்திஜீ:—"ராமன் என்று பெயர் வையுங்களேன்."

வந்தவர்:—"நீங்கள் அப்படி வைப்பதில் எனக்கு ஆட்சேபமில்லை."

காந்திஜீ குழந்தைக்கு ராமன் என்று பெயர் வைத்தார்.

ஆனால், வெளியிலிருந்தவர் கேட்ட பொழுது அந்த மனிதர் என்ன சொன்னார் தெரியுமா? "குழந்தையின் பெயர் காந்தி-ராமன் என்று வைக்கப்பட்டிருக்கிறது" என்பதுதான்.

'எலக்டிரிக் வீடு' ஏலம்

"முதன் முதலில் இந்த வீட்டை நான் ஏலம் போடவேண்டும். இதில் 'எலக்டிரிக்' வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன" என்று ஆரம்பித்த காந்திஜீ ஒரு சிறு பொம்மை வீட்டைக் கையில் எடுத்தார்.

எடுத்த வுடனே ஒருவர் "500 ரூபாய்" என்று ஏலங் கேட்டார்.

அந்தத் தொகைக்கே காந்திஜீ வீட்டை விற்பனை செய்துவிட்டார். இது சோழவந்தானில் நடந்த சங்கதி.

புலியா, சிங்கமா ?

பூநூலால் நெய்த மிக அழகிய படமொன்றைப் பவானிபூரில் ஏலம்போடத் துவங்குகையில், "இந்தப் புலியை ஏலங் கேளுங்கள்" என்றார் காந்திஜீ.

ஒருவர்:—"அது புலியல்ல; சிங்கம்."

காந்திஜீ:—"புலியும் சிங்கமும் ஒன்றுதான். இரண்டும் உறவின்முறையோர்கள்."

"5 ரூபாய்" என்று கூறினார் ஒருவர்.

காந்திஜீ :—"5 ரூபாய்க்கா இதை வாங்குவது! இது ரொம்பச் சாதுவான புலி; தொந்தரவு செய்யாது" என்று தமாஷ் செய்தார்.

பிடிவாதத்துக்குத் தண்டனை !

இதுவும் பவானிப்பூரில்தான். ஒரு ஹரிஜனச் சிறுமி, ஹாரம் ஒன்றைக் காந்திஜீயின் கழுத்தில் போடவந்தாள். காந்திஜீ அதை வாங்கக் கையை நீட்டினார். சிறுமி தானே போடவேண்டுமென்று பிடிவாதம் செய்தாள்.

"நீ பிடிவாதம் செய்தால், நான் மாத்திரம் விடுவேனா?" என்று காந்திஜி அதி விரைவாய்க் கூறி, சிறுமி காரை விட்டு இறங்குமுன், பக்கத்திலிருந்த ஜரிகைமாலை யொன்றைச் சிறுமியின் கழுத்தில் பரிஷ்காரமாக அணிந்துவிட்டார்.

உயிரை நம்பினவன் கெடுவதில்லை. பழக்கத்தை நம்பினவன் பலகாலும் ஏமாந்து போகிறான். மேய்கிற மாட்டுக்கு, கொம்பில் புல்லைக் கட்டி, வெளியே அனுப்புவதில்லை. உயிர், உயிர்தான் வேண்டும்; வளர்ச்சிதான் வேண்டும். இரும்புப் பெட்டியிலிருக்கும் பணம் சமயத்துக்கு உபயோகப்படாது. கையிலிருக்கும் பணம்தான் உபயோகப்படும். நெருக்கடியில், உயிர்தான் உயிரைக் காக்க முடியும். சட்டம் நம்மைக் கைவிட்டுவிடும்; அதை மனிதனும் கைவிட நேரிடும். ஆனால் புது வாழ்வினால், புதுச்சட்டம் தோன்றும். சட்டம் என்ற கொள்கைக்கு ஒருநாளும் ஆபத்துக் கிடையாது. தனிச் சட்டங்கள் பல போகலாம், போகவேண்டும்,

கிழிந்த புத்தகம்

(ரா. ஐயராமன்)

காமுவும் சீனுவும் உள்ளே கை கோத்துக் கொண்டு ஓடிவந்தார்கள். அறைக்குள் சுற்றுமுற்றும் பார்த்தார்கள். உயர இருந்த ஒரு பலகணியின் மேல் அவர்கள் தேடிய பல்லாங்குழி தென்பட்டது.

ஒரு ஸ்டூலைப் போட்டுக்கொண்டு சீனு அதை எடுக்கப் பார்த்தான். ஆனால் அது எட்டவில்லை. அதனால் ஒரு நாற்காலியின் மேல் அந்த ஸ்டூலைப் போட்டுக்கொண்டு காமுவை ஆடாமல் பிடித்துக்கொள்ளச் சொல்லிவிட்டு ஏறி அதை எடுத்தான்.

கீழே வைத்து ஒவ்வொரு குழிக்கும் பன்னிரண்டு பன்னிரண்டு சோழிகள் எண்ணிப் போட்டு இருவரும் விளையாட ஆரம்பித்தார்கள்.

எப்பொழுதும் சீனு பல்லாங்குழி ஆட்டத்தில் ஜயித்துவிடுவான். அவனுக்கு அவ்வளவு பழக்கம். ஆனால் இன்றையதினம் அவனுக்கு அதிர்ஷ்டமில்லை போலும்; காமு சுலபமாக இலவான்களைப் பறித்துக்கொண்டும் காசியைப் பொத்திக்கொண்டும் வந்ததனால் அவன் கை சலிக்க ஆரம்பித்தது.

கடைசியில் ஒற்றைவிதை ஆட்டம் வந்தது. அதில் எப்படியாவது சேர்ந்து கொண்டு வந்திருந்த ஒரு வாழும் காசியைப் பொத்திவிட எண்ணமிட்டுக் கொண்டிருந்தான். அந்தோ! அதுவும் ஈடேறவில்லை; அவன் தோற்றுவிட்டான்.

காமுவுக்கு அடங்காத சந்தோஷம். அபூர்வமாகவல்லவா அவள் ஜயித்திருக்கிறாள்! ஆதலால் அவள் அதிக உற்சாகத்துடன்,

"சப்பானே சோவானே
காசிக்குப் போவானே
ஆட வருவானே
தோத்துப் போவானே"

என்று சீனுவை ஏளனம் செய்ய ஆரம்பித்தாள்.

முதலில் சீனு பொறுத்துப் பார்த்தான். காமு மேலும் பரிகசிக்கத் தொடங்கினாள். அவனது பொறுமை எல்லையைக் கடந்து வெளிக் கிளம்பியது.

"காமு, ஒரு நாள் ஏதோ பிரமாதமாக ஜெயித்துவிட்டால் பெருமைப் படுத்திக்கொள்ளுகிறாயே! நான் அப்புறம் டூ விட்டுவிடுவேன்" என்றான்.

காமுவுக்கு என்ன இருந்தாலும் பெண்புத்திதானே? அதிலும் ஏழு வயதுப் பெண் புத்தியல்லவா? அதனால் அவள் கேலி செய்வதை நிறுத்தவில்லை.

சீனு வெகு கோபத்துடன், "நான் உன்னுடன் டூ; நிச்சயமாய்ப் பேசப் போவதில்லை" என்று சொல்லிவிட்டு அறையை விட்டு அகன்றான்.

சினம் அவனை வெறிப்படுத்தியது. ஏதாவது உடனே காமுவின் மானபங்கமாகச் செய்தால்தான் மனம் நிம்மதியடையும்போல் இருந்தது. ஆதலால் வேகமாகக் காமுவின் புத்தகப் பெட்டியிடம் போனான். படபட வென்று அதைத் திறந்து அவள் தமிழ் வாசகப் புத்தகத்தை எடுத்து முழுவதையும் பாதியாகக் கிழித்தான்; இருந்த இடத்தில் வைத்தான். அவனது உள்ளம் தற்கால சாந்தியடைந்தது.

இதை யெல்லாம் சீனுவைத் தொடர்ந்து வந்த காமு பார்த்தாள். அவளுக்கு அடங்காத கோபம் வந்துவிட்டது.

"அப்பாவிடம், சொல்கிறேனா, இல்லையா பார்?" என்று தனக்குள் சொல்லிக்கொண்டு வெளியே ஓடினாள்.

* *

விடியற்காலை; இளைய இருள் இன்னும் பரவிக்கொண் டிருந்தது. கூடத்தில் காமுவும் சீனுவும் தனித்தனிப் படுக்கையில் படுத்துக்கொண் டிருந்தனர்.

காமுவின் முகம் தெள்ளியதா யிருந்தது; களங்கமற்றதாய் இன்பத்தினொளி பெற்றுச் சாந்த நிலையில் திகழ்ந்து கொண் டிருந்தது.

சீனுவோ வாடிய முகத்துடன் இருந்தான். சரியாகத் தூங்குபவன் போலத் தோன்றவில்லை. அடிக்கடி புரண்டு கொண் டிருந்தான். அவ்வப்பொழுது சற்றுத் தலையை நிமிர்த்திப் பக்கத்திலிருந்த தங்கையைப் பார்த்துப் பரிதாபப்பார்வையை அடைவான். சில சமயங்களில், "நான் இனி உன்னோடு டூ விடவில்லை" என்று பிதற்றுவான்.

இருள் அகன்றது; பொழுதுவிடிந்தது. காக்கைகளும் புள்ளினங்களும் கூவிக்கொண்டு கதிரவனை வரவேற்றன.

அந்தச் சமயத்தில் அவர்கள் தகப்பனார் சந்தடி செய்யாமல் வந்தார். இரு குழந்தைகளையும் பார்த்தவுடன் அவர் முகத்தில் சந்தோஷம் மலர்ந்தது. முதலில் காமு வண்டை வந்தார். அவளது போர்வையால் மூடப்பட்ட உடம்பின் மேல் ஒரு ரூபாயையும் ஒரு சிறிய கடிதத்தையும் வைத்தார். பிறகு சீனு வண்டைபோய் அதேமாதிரி செய்துவிட்டு வந்தபடியே சந்தடிசெய்யாமல் வெளியேறினார்.

முதலில் சீனு விழித்துக்கொண்டான். அவன்மேலிருந்த காசு கீழே விழுந்தது. என்னவென்று ஆச்சரியத்துடன் பார்க்கையில் ஒரு கடிதம் கண்ணுக்குப் புலப்பட்டது. அதைப் படித்தான்:

"அருமைச் சீனுவுக்கு,

"இன்றையதினம் நமது அம்பிக்குக் காதுகுத்திக் கல்யாணமாதலால் இதனுடன் அரைரூபாய் வைத்திருக்கிறேன். இன்னும் அதிகமாக வைப்பதாக இருந்தேன். ஆனால் சமீபத்தில் துஷ்டத்தனம்செய்ய ஆரம்பித்திருக்கிறாயென்று தெரியவருகிறது. இனி, சமத்தா யிரு.

இப்படிக்கு,
உன் அருமை அப்பா."

சீனு தன் புருவங்களை நெறித்துக் கொண்டான். 'நான் என்ன துஷ்டத்தனம் செய்திருக்கக்கூடும்? அன்றையதினம் பள்ளிக்கூடத்தில் அடிபட்டதை யாராவது அப்பாவிடம் சொல்லிவிட்டார்கள் போலிருக்கிறது' என்றெல்லாம் எண்ணமிடலானான்.

பக்கத்திலிருந்த காமுவைப் பார்த்ததும் இவ்வெண்ணங்களெல்லாம் மறைந்தன. அவன் முகமும் ஒளி பெற்றது. புன்னகை புரிந்துகொண்டே எழுந்தான். பெரிய சிக்கலான ஒரு காரி

யத்தை இடையூறில்லாமல் முடிக்கும் வழியை அறிந்தவனைப்போலத் துள்ளி எழுந்தான்.

* * *

அன்றைத்தினம் முழுவதும் வீட்டில் ஒரே ஆர்ப்பாட்டம்; ஒரே கேளிக்கை; பட்டுப்பாவாடைகள் நடக்கும்போது செய்யும் சல சலவென்ற சப்தமும், நாதஸ்வரத்தின் பாட்டும், குழந்தைகள் கலகலவென்று சிரிப்பதும் வீட்டை நிரப்பின.

சீனு காமுவிடம் பேசவில்லை; ஆனால் அவன் நடையுடைபாவனையால் ஏதோ ஒரு காரியத்தைச் சாதித்தவன்போல இருந்தான்.

காமுவுக்குக் கொண்டாட்டத்தில் தலைகால் புரியவில்லை, தனது பள்ளிச் சிநேகிதிகள் எல்லோருடனும் வெகு சந்தோஷமாகக் காலத்தைக் கழித்து வந்தாள்.

இவர்களெல்லோரும் விருந்து ஆன பிறகு ஒரு மூலையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். அப்பொழுது காமு தன் சிநேகிதி ஒருத்தியைப்பார்த்து, "இந்த கவுன் யாரடி வாங்கித் தந்தார்?" என்று வினவினாள்.

"பட்டணத்தி லிருக்கிறாரே, அந்த அண்ணா வாங்கி அனுப்பினார்" என்ற பதிலைக் கேட்டதும் அவள் மனத்தில் ஒரு கலக்கம் உண்டாயிற்று. அதைத் தொடர்ந்து எல்லாப் பெண்களும் தத்தம் தமையன்மார்களின் சிறப்பைக் கூற ஆரம்பித்தார்கள். இதெல்லாம் காமுவின் கலக்கத்தை அதிகப்படுத்தின.

எல்லோரும் வெற்றிலை பாக்கு வாங்கிக்கொண்டு அவரவர் வீட்டுக்குச் செல்ல லானார்கள்.

காமு சோகம் பொருந்திய முகத்துடன் தனதறைக்குச் சென்றாள். தனது புத்தகப் பெட்டியுடன் சென்று அலக்ஷியமாகப் புத்தகங்களைக் கலைத்தாள். அப்படிச்செய்யும்போது ஏதோ ஒரு புத்தகம் கீழே விழுந்தது. அதை எடுக்கக் குனியும்போது

"தமிழ் வாசகம்"

என்று கொட்டையெழுத்தில் போட்டிருந்ததைப் பார்த்தாள். அவள் தன் கண்களை நம்பவில்லை. 'அந்தப் புத்தகந்தான் கிழிக்கப்பட்டதே!'

எடுத்துப் பார்த்தாள். அட்டையைப் புரட்டினாள். சீனுவின் கையெழுத்தில் 'காமாக்ஷி' என்று அழகாக முத்துக் கோத்தாப்போல் எழுதப்பட்டிருந்தது.

காமுவின் கன்னங்களில் இரண்டு குழிகள் விழுந்தன.

(கலைமகள்)

கைதியின் செருக்கு

("திலீபன்" எழுதியது)

இந்து தேச சரித்திரம் நமது குழந்தைகளுக்கு ஆங்கிலக் கலாசாலைகளில் போதிக்கப்படுகின்றது. அச்சரித்திர நிகழ்ச்சிகளை எழுதித் தந்தவர்களோ, நம்மைத் தற்பொழுது ஆளும் வகுப்பார். எனவே, அந்நிகழ்ச்சிகளில் பல திரிக்கப்பட்டிருக்கின்றன; மாற்றப்பட்டிருக்கின்றன; கற்பனையும் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த விபரீதங்கள், நமது தேச சரித்திர ஆராய்ச்சி நிபுணர்களால், இப்பொழுது ஆதாரங்களோடு வெளிப்படுத்தப் பெற்று வருகின்றன. முக்கியமாக வெள்ளைக்காரர் தந்துள்ள இந்திய சரித்திரத்தில், முகம்மதிய ஆட்சி மிகவும் குரூரமாகச் சித்திரித்துத் தரப்படுகின்றது. இந்து-முஸ்லீம் பகைமை உணர்வு இதனால் நீடிக்க இடமேற்படுகின்றது. முகம்மதிய மன்னர்கள் பெருங் கொடுமைகளை ஹிந்துக்களுக்குச் செய்ததாகச் சொல்வதெல்லாம் சுத்தப் பொய் என்பதை நமது சரித்திர வல்லுநர் இன்று மெய்ப்பித்து வருகின்றனர்.

முகலாய மன்னரிலே அவுரங்கசீப் என்ற ஒருவர் இருந்தார். ஹிந்துக்களை ஹிம்சிப்பதில் அவர் இணையிலாதவர்போல், நமது பள்ளிச் சிறுவர் சரித்திரப் புத்தகங்கள் வர்ணித்துச் செல்கின்றன. ஆனால், உண்மையென்ன? அவரது மேலான குணங்கள் பல இப்பொழுது உருசுப்பிக்கப்பட்டு வருகின்றன. அவுரங்கசீப் ஓர் சிறந்த ஞானி; பெருந்தன்மை யுடையவர்; தெய்வ பக்தி மிகுந்தவர்; தைரியம் நிறைந்தவர். அவருடைய பெருந்தன்மையை வெளிப்படுத்தும் ஓர் நிகழ்ச்சியை, கவி யரசர் தாகூர், ஓர் பாவிலே பாடி யளித்திருக்கின்றார்.

இந்தியாவின் ஒரு கோடியிலிருந்து மறுகோடி வரையில், சக்கிரவர்த்தி அவுரங்கசீப் கலக்கிவந்த சமயம்; வெற்றிவாகைகள் சூடி, மன்னர்களையெல்லாம் நிலை கலங்கச்செய்த சமயம். ஒரு நாள் அரியாசனத்தே அவர் அமர்ந்திருந்தார். மார்வார்ச் சிற்றசர் அவர் முன் வந்தார். பணிவுடன் இவ்வுரையைச் சக்கிரவர்த்தியிடம் அவர் பகரலானார் :—"பிரபுவே! நிச்சப்தமான நள்ளிரவிலே, புலிகளைத் தோற்கடித்த புகழ்மிக்க வீரன் நாஹூர், சிரோஹி மன்னனைச் சிறைப்பிடித்துவிட்டனன். இப்பொழுது, என் மனையில் அவன் அடைபட்டிருக்கிறான். அவனை என்ன செய்யவேண்டுமென்பது தங்கள் சித்தமோ? பணித்தருள்க!"

"என்ன அதிசயம்! நான் கேட்பது என்ன அதிசயம்!" என்று வியப்புடன் மொழிந்த மன்னர் மன்னன், "இடிமுழக்கம் செய்யும் மின்னல் பிடிபட்டதா? சில நூறு மலைவாச மனிதரோடு, குன்றிலும், காட்டிலும் திரிந்தான் அந்த ராஜபுத்திரன். பாலைவனத்தின் கானலைப்போல், கைக்கு அகப்படாமல், அவன் சுதந்திரமாய்த் திரிந்தான். எங்கே அவனை நாம் பார்க்கவேண்டும். ஓர் தூதனை அனுப்பி, நம் சபைக்கு அவனை அழைத்துவரச் செய்க" எனப் பணித்தான். கை கட்டி வாய் புதைத்த மார்வார் மன்னனான யஸோவந்தன் "மன்னர் பெரும! எனக்கொரு வாக்களிக்க வேண்டும்" என்று வேண்டலானான்.

சக்கிரவர்த்தியும் முறுவலுடன் யாதென வினவும் பான்மையில் தலையை அசைத்தான். "அவனும் ஓர் தீரனான சிற்றரசன். தங்கள் பேரவையில் அவனைக் கௌரவக் குறைவின்றி நடத்தியருளல் வேண்டுமென்பதே என் பிரார்த்தனை. மரியாதையுடனே அவனை நான் இங்கு அழைத்து வருகின்றேன்" என்றான் யஸோவந்தன். மன்னர் மன்னன் வாய்திறந்து நகைத்து, மொழியலானான் :—"மார்வார் மன்னவ! நீ அறிவிலும் வீரத்தி

னும் சிறந்தவன். ஆயினும், உன் சொற்கள் என்னை அவமானப்படுத்துகின்றனவே. நானோ ஓர் பெருமை மிக்க மனிதனுக்குக் கௌரவ பங்கமிழைப்பவன்? கௌரவமிக்கதோர் பாரம்பரையில் வந்த எனது தன் மதிப்பு, அத்தனை கீழ்மையானதோ? அவ் வெண்ணத்தை விட்டொழி. அவனை வரச்செய்."

சிரோஹிச் சிற்றரசன் சூர்த்தானும், மன்னர் மன்னன் சபை வந்தெய்தினான். மார்வார் ராணா துணை வந்தான். நிமிர்ந்த சிரத்துடன், எதிரேயிருந்தவரைக் கம்பீரமாக நோக்கிய வண்ணம், மெல்ல மெல்ல நடந்து, உள்ளே வந்தான் சிரோஹி. சுற்றிலுமிருந்த சபையோர், மனம் பதைக்கலாயினர். "என்ன அகந்தை!" என்று அவர்கள் கூவினர். "மன்னர்பிரானுக்குத் தலை வணங்கிப்பணி" என, இடிமுழக்க மொப்ப, அவர்கள் ஆர்ப்பரிக்கலாயினர். சிரோஹியோ அவ்வாறு செய்பவன்? அவனது முடி, வணங்காமுடியன்றோ? உடல் பிடிபட்டது; வீரமும் பிடிபட்டதோ? யஸோவந்தன் தோள்மிசை மெல்லெனச் சாய்ந்த சிரோஹி, துக்கம் ததும்பிய குரலில், மெதுவாக, எனினும் கம்பீரப் பொலிவுடன், உரைக்கலானான் :—"என் வம்ச முதியோர்க்கே, என் தலை வணங்கும்." கூட்டத்திலே ஒருவர் கண் கொவ்வைக் கனியெனச் செவந்தது. "உன் தலை எவ்வாறு புழுதியிலும் புரண்டுருளும் என்பதை இதோ காட்டுகிறேன்" என அவர் உரைத்தார். சிரோஹி இதைக் கேட்டு அச்சமெய்தினனா? சிங்கமென அவன் வீர கர்ச்சனை புரியலானான். "கோழைத்தன மிக்க பயத்தால் என் தலையை வணக்க முடியுமோ? அச்சமும் நானும் ஒருவருக்கொருவர் என்றும் அன்னியர். அதனை நானறியேன்" என்றான். பதைத்த மன்னவன் அலட்சியமாகத் தன் உடைவாளை உருவி வெளியே எடுத்தான்.

இதைக் கண்ணுற்ற சக்கிரவர்த்தி, தன்னருகிருந்த செருக்கு மிக்க பிரபுவைக் கையமர்த்தி, யஸோவந்தனை நோக்கி, "வீரக் கோமகனே! இவ்விந்து தேசத்திலே, எந்நாடு மிகச் சிறந்ததென்று நீ கருதுகின்றாய்?" என வினவினான். சூர்த்தான் சிறிதும் தயக்கமின்றி, "அசால்கார் எனும் நாடே மிக எழில் பொலிவது. இவ்வகண்ட பூமியிலேயே அதற்கிணையானது வேறொன்றில்லை" என்று தன் கருத்தை வெளியிட்டான். சபையோர் அவன் கூற்றைக் கண்டு, மௌனமாக, எள்ளி நகைத்தனர்.

ஆனால், அவர் நகைப்பின் கதி யாதாயிற்று? நகைத்தவர் நாணித் தலை கவிழ வேண்டியதாயிற்று. மன்னர் கோமான் வாய் திறந்து மொழிந்தருளியது என்ன? அவுரங்கசீப்பின் விழியிலே ஒளி நிறைந்தது. "வீர மன்னவ!" என்று சிரோஹியை நோக்கி விளித்த அவன், "அசால்கார் நாட்டை, எந்நாளும் உன் சொந்தமாக ஆண்டுகொள்" என்று வாக்களித்தான். வீரனை மதிக்கா வீரனுமுண்டோ? உடல் தளைக்கப்படும்; வீரத்தைத் தளைக்க வியலுமோ? உண்மை வீரன் அச்சிறு முயற்சியிலே ஈடுபடுவதுமுண்டோ? வீரம் எங்கே தோன்றினும் அதனை வணங்குவதன்றோ வீரனுக்கு அழகு? அவுரங்கசீப், வீரமும் பெருமையும் பொருந்திய கோமகனல்லவோ?

இந்நிகழ்ச்சியைப் படிக்கும்பொழுது இதிலுள்ள ஓர் சூட்சும மனோதத்துவ உண்மையை நாம் உற்றுணர்தல்வேண்டும். எதிரியையும், அவனது வீழ்ச்சியிலே, தன் கையிலகப்பட்டுத் தப்ப வழியற்ற போதினில், மிகக் கண்ணியமாக நடத்தும் ஒருவர் மனோத்துவம் யாது? அதன் மூல உணர்ச்சி என்ன? மகா அலெக்ஸாண்டர், புருஷோத்தமனை இவ்வாறே நடத்தினான். வீரமிக்க பெல்ஜியத் தளபதி லீமானை, ஜர்மன் சேனைத்தலைவன் இதனைப் போலவே, வாளைக் கையிலேயே வைத்திருக்க வேண்டி, மதிப்புடன் நடத்தினான். இப் பெருந்தன்மைக்குப் பின்னேயுள்ள மூலவுணர்ச்சி யாது? சமுதாய மனோதத்துவ சாஸ்திரிகள் ஓர் உண்மையைக் கூறுகின்றார்கள். நீதிமான் உணர்ச்சியை எங்கெல்லாம் காணலாம் என்பதை அவர்கள் எடுத்துக் கூறுகின்றார்கள். வீரர்களின் போராட்டத்தினடுவே நீதியுணர்வைத் தரிசிக்கலாம்; நேரிய செருக்குடையவர் போட்டி விளையாட்டிலே நீதியுணர்வைக் காணலாம். அவுரங்கசீப்பின் இப்பெருந்தன்மைக்குப் பின்னின்ற உணர்ச்சிகள் யாவை? ஒன்று, புனிதமான உடனுணர்வு; மற்றொன்று, உன்னத நீதியுணர்வு. அவுரங்கசீப், அன்புமிக்க சிந்தையன்; நீதிமான். அல்லவென்று, இந்நிகழ்ச்சியையறிவார் எவர்தான் கூறமுடியும்?

மகாத்மா காந்தி எழுதிய

நூல்கள்

		ரூ.	அ.	பை.
இல்லறமும் பிரும்மசரியமும்	....	0	6	0
மகா தியாகம்	....	0	4	0
அனாசக்தி யோகம்	....	0	4	0
ஹிந்து தர்மம்	....	0	2	0
கீதா போதனை	....	0	2	0
உத்தம வாழ்க்கை	....	0	2	0
ஆரோக்கிய வழி	....	0	4	0
நீதி தர்மம்	....	0	2	0
சத்திய சோதனை முதற் பாகம்	...	1	8	0
சத்திய சோதனை இரண்டாம் பாகம்	....	2	0	0

சென்னையில் உங்களுக்குத் தெரிய வேண்டியவர்

ஆங்கிலோ-பர்மா பின்மென்

இடம் : 41, பிராட்வே. 4, சல்லியன்ஸ் கார்டன், மயிலாப்பூர்.

THIS IS GUARANTEED

சலவை முதல்தரமா யிருக்க வேண்டுமா? சுத்தமாய் உலர்த்தித் தர வேண்டுமா? சாயம் கெடாமல் வெளுத்துக் கொடுக்க வேண்டுமா? வேண்டுமானால், ஆங்கிலோ-பர்மா பின்மென்காரரிடமே உங்கள் துணிகளைப் போடுங்கள்.

☞ கோயில்கள், மசூதிகள், சர்ச்சுகள்—இவைகளுக்கு இலவசச் சலவை.

'அபிப்பிராய பேதம்!'

(சங்கு ஸுப்ரஹ்மணியன்.)

'குட்டுப் பட்டாலும் மோதிரக் கையால் குட்டுப்பட வேண்டும்' என்பது நல்ல பழமொழிதான். ஆனால் அதற்காக, குட்டு வாங்கிக் கொள்வதே நோக்கமாக மோதிரக் கையினிடம் போகவேண்டுமோ? எதிர்க்கப் போனாலும் பெரிய ஆளாகப் பார்த்து எதிர்த்துத் தீருவது என்றெண்ணம் கொண்டு உலகில் அலைபவர் பலர். அதிக சிரமமின்றிக் கீர்த்தி சம்பாதிப்பதற்கு இது ஒரு வழியென்று நினைப்போரும் உண்டு. எதிர்ப்பது, பிறகு "நமக்கும் அந்தப் பெரியாருக்கும் அபிப்பிராய பேதம்" என்று பகிரங்கமாகப் பறையடிப்பது, இதுதான் அவர்களுடைய தந்திரம்.

ஓநாயின் அபிப்பிராயபேதம்

'அபிப்பிராய பேதம்' என்ற பதம் வெகு லகுவானது. இழுக்க இழுக்க இந்தியா ரப்பரைவிட நீளுவது. ஆனால் இதை உச்சரிக்கும் உதடுகளையும், அந்த உதடுகளையுடைய பிராணியையும் கவனிக்க வேண்டியது அத்தியாவசியம்.

"நீ தப்புச் செய்தாலென்ன, உன் பாட்டன் தப்புச் செய்தாலென்ன" என்றது ஓநாய்.

"ஐயா! என் பாட்டன் செய்த தப்புக்கு நான் எப்படிப் பொறுப்பாளி" என்கிறது ஆடு.

"சரி, நமக்குள் அந்த விஷயத்தில் அபிப்பிராய பேதம்!' என்று கூறி மேலே பாய்ந்து விட்டது ஓநாய். எதிரியோடு பேசுவதற்குத் தர்க்க அறிவு இடங்கொடுக்காவிட்டால் 'அபிப்பிராய பேதம்' என்ற வார்த்தை ஊர்வலம் வரத் தொடங்கும்.

செல்லாக்காசுகள்

செல்லாக் காசினால் பூவா தலையா ஆட்டம் ஆடினால் பூவென்றும் கூற முடியாது தலை யென்றும் கூறமுடியாது. சாதாரணப் பேர்வழி பெரிய விஷயத்தில் தனக்கு ஏதோ அபிப்பிராய மிருப்பது போல அனுமானித்துக் கொள்வது செல்லாக் காசைப் போலத்தான். சாய்வு நாற்காலியின் சட்டத்தில் ஆணியால் அடிக்கப் பட்டு அலங்கார வஸ்துவாகச் செல்லாக் காசு இருக்கலாமே யன்றி, செலாவணிக்கோ அல்லது பூவா தலையா ஆட்டத்துக்கோ வெளியே வருவதற்கு இடமில்லை.

சர்ச்சையில் உள்ள விஷயத்தைப் பூரணமாசக் கிரகித்துக்கொள்ளச் சக்தியற்றவனும் இஷ்டமற்றவனும் நுழைந்தால் அபிப்பிராய பேதம் வெகு சுலபமாக முளைத்துவிடும். "அந்த மரம் இந்த வருஷம் காய்க்கவில்லை யென்று நான் சொன்னேன். 'இல்லை, இல்லை. இரண்டு காய்களிருந்ததை நான் பார்த்தேனே' என்று ஒருவன் குறுக்கிட்டால் அவனை முழுமடைய னென்று தான் நான் சொல்வேன்" என்றார் டாக்டர் ஜான்ஸன். பெரியார்கள் பொதுப் படையாக அநேக விஷயங்களில் அபிப்பிராயங் கூறுகிறார்கள். அவைகளின் ஓரங்களைப் பிடித்துக் கொண்டு "ஹா இந்த அபிப்பிராயம் தப்பு! இதோ பொத்தலைப் பாருங்கள்" என்று சில சில்லறை மனிதர் கூறுகின்றனர். அந்த இடங்களையும் மூடுவதற்குப் போதிய காரணங்களைக் காட்டி விட்டால் "சரி, நாமும் அந்தப் பெரியாரும் அபிப்பிராய பேதப் படுகின்றோம்" என்று வறட்டு ஜம்பத்தோடு கூறிவிட்டு, நழுவி ஓடிவிடுகின்றனர் சில்லறை மனிதர்.

குடும்பத்தில்

ஆனால் இந்த 'அபிப்பிராய பேதம்' பண்ணுகின்ற கொடுமைகள் கொஞ்சம் நஞ்சமன்று. பிள்ளை சாகக் கிடக்கின்றான். தகப்பனார் எம். பி. பி. எஸ். டாக்டரை அழைத்து வருவதாகச் சொல்கின்றார். தாயார், "கூடவே கூடாது. பாட்டியின் கஷாயத்தைத் தான் உபயோகிக்க வேண்டும்" என்கிறாள். பிள்ளையோ தனக்கு எந்த மருந்துமே வேண்டாமென்கிறான். எல்லாம் அபிப்பிராய பேதங்கள்தான். இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் அபிப்பிராய பேதப் பாசாங்கு கொண்டு சும்மா இருந்தால் பிள்ளை யாண்டான்பாடு பரலோகயாத்திரை தான்.

"கோயில் மரத்தைக் கள்ளுக்கு விட்டால்தான் உச்சிக் காலப் பூஜை நடத்த முடியும்" என்கிறார் தர்மகர்த்தா. "அதனால் வரும் காசு பாவக் காசு" என்கிறார் இன்னொரு தர்மகர்த்தா. இவ்வாறாக "அபிப்பிராய பேதம்." ஒரு முடிவும் ஏற்படாமல் கோயில் பூட்டப்படுகிறது. 'அபிப்பிராய பேதம்' செய்த லீலை.

குழந்தை குலைத்தால்

குடும்பத்தையும், தெய்வத்தையும், தேசத்தையும் ஓரோர் சமயங்களில் பாழாக்குவதற்கு 'அபிப்பிராய பேதம்' என்ற வார்த்தையை வெகு தாராளமாகச் சிலர் ஊர்வலம் வர விடுகின்றனர். நம் வீட்டு நாய் குலைப்பது அழகாகத்தா னிருக்கிறது. ஆனால் நாளைய தினம் நாம் செல்லமாகப் பெற்றெடுத்த குழந்தை குலைக்க ஆரம்பித்ததானால், அதையும் அழகு என்று புகழ் மொழி கூற முற்படுவோமா? அவனைக் "குலைக்காதே" என்று கண்டித்துப் பழக்குவதுதான் சரியான முறை.

'அபிப்பிராய பேதம்' என்ற பதம் வேதாந்திக ளிடையிலும், சிந்தனைசக்தி ததும்பியவர்க ளிடத்திலும், இருப்பதைப்பற்றித் தேசத்துக்கு நஷ்டமில்லை. பெரியார்களிடை 'அபிப்பிராய பேதம்' ஏற்பட்டால் விஷயங்கள் இன்னும் தெளிவாக உள்ளோர் அறிய இடமேற்படும். ஆனால் தேசத்தைப் பற்றியோ மதத்தைப் பற்றியோ கவலையின்றிக் காலங் கழிப்பவர்களும், ஒரு ஸெகண்டு கூடப் பொது வேலையில் ஈடுபடாதவர்களும் "இந்த மகாத்மா காந்தி யென்கிறவர் ஹரிஜனங்களோடு கொண்டு கொடுத்து உறவாடவேண்டு மென்கிறாரமே. என்ன அக்ரமம்! நாம் அவரோடு அபிப்பிராய பேதப் படுகின்றோம்" என்று சொல்லும்போதுதான் இந்தப் பதத்துக்குத் தூக்குத் தண்டனை தரப்பட்டதாக நினைக்க வேண்டும். மகாத்மாஜியின் மதபக்தி எங்கே? பொது ஜன சேவை எங்கே? திண்ணையில் உட்கார்ந்து "தொந்தி வளர்ச்சியே மத வளர்ச்சி" யென்று எண்ணிக் கொண்டிருக்கும் பேர்வழிகளின் கருத்துக்கள் எங்கே? எதிரே இலையில் ஒரு வேளைச் சோற்றையும் உக்கிராணத்தில் ஒரு வருஷச் சோற்றையும், வயலில் பல வருடச் சோற்றையும் வைத்துக் கொண்டிருக்கும் பணக்காரன், "அநேகர் பட்டினி கிடக்கிறார்களென்று இந்தக் காந்தி சொல்கிறாரே. நானும் அவரும் அபிப்பிராய பேதப்படுகிறோம்" என்று சொல்வானால் அவனது அபிப்பிராய பேதத்தைத்தான் யார் பொருட்படுத்துவார்?

"குதிரைப் பந்தயம் கூடாது என்று அம்மா சொல்கிறார்கள். நான் போகத்தான் போவேன். எங்களிருவருக்கும் இதில் அபிப்பிராய பேதம்" என்று சொல்லிவிட்டு, கிண்டிக்கு டிக்கட் வாங்கும் அந்தப் பிள்ளையால் குடும்பத்தின் கதி என்னவாகுமென்று சொல்ல வேண்டுமோ?

குரு கோவிந்த சிங்கன்

(வ. வே. ஸு. அய்யர் எழுதியது)

[பூர்வ கதை:—தேக பகதூரை மொகலாய மன்னன் கொன்றுவிட்டான். இதற்குப் பழி தீர்ப்பதற்காக, அவனுடைய மகன், சிஷ்யர் என்ற ஓர் வீரப் படை சேர்க்கிறான். பலமான யுத்தங்களும் மொகலாயருடன் நடத்துகின்றான். குருவின் புத்திரர் இருவரை ஒரு துரோகி எதிரிகளிடம் பிடித்துக் கொடுத்துவிடுகிறான். சின்னஞ்சிறு பாலகரான இருவரையும் முஸ்லீங்களாக மதம் மாறினால், விட்டுவிடுவதுடன் பெரும் பதவியும் தருவதாக எதிரிகள் ஆசை காட்டுகிறார்கள். சிறுவர் வீரத்துடன் மறுக்கவே, பாலகரை எதிரிகள் உயிரோடு சுவரில் வைத்துப் புதைத்துவிடுகிறார்கள். இந்தத் தியாகம் குருவைச் சூழ்ந்திருந்த சிஷ்யர்களுக்குப் பெரும் தைரியத்தை ஊட்டிவிட்டது.]

மரணத் தறுவாயில் மன்னிப்பு

அவர்கள் குருவின் பாதாரவிந்தங்களில் வீழ்ந்து, "ஐயனே, குழந்தைகளின் ஆத்மத் தியாகம் எங்களுக்குத் தேவ பலத்தைக் கொடுத்துவிட்டது. மற்ற சிஷ்யர்களுடைய மனதையும் இது மாற்றிவிட்டது என்று அறிகிறோம். அவர்களைச் சபித்த சாபத்தைத் தேவரீர் மாற்றினால் அவர்கள் தங்கள் கடமையினின்று இனிப் பின்வாங்கவே செய்யார்கள் என்று நாங்கள் பிணை நிற்க முடியும்: மாற்றியருள்க!" என்று வேண்டினார்கள். குரு மகாராஜனும் சாபத்தை மாற்றிவிட்டான்.

எதிரிகளின் சைனியம் நாளுக்குநாள் வளர்ந்து வந்தபடியால் கோவிந்த குரு தன் சிறு தளத்தைக் கூட்டிக்கொண்டு சம்கௌடம் என்ற கோட்டைக்கு இரவோடிரவாய்ச் சென்றான். ஆனால் தப்பிச் சென்ற செய்தி மொகலாயருக்குத் தெரிந்து அவர்கள் அவ்வூரை முற்றுகை போட்டார்கள். சண்டைகள் கோரமாய் நடந்தன. தோட்டியாக இருந்த ஜீவன சிங்கன் என்பான் மகா உக்கிரமாகப் போர்புரிந்து போர்க்களத்திலேயே மடிந்து குருவின் அருளைப் பெற்றான். அவன் வீழ்ந்த இடத்தில் ஓர் வீரக்கல் வைத்திருக்கிறார்கள். அதை இன்னும் காணலாம்.

எத்தனை நஷ்டமும் நாசமும் வந்தாலும் கிஞ்சித்தேனும் சலியாமல் சிஷ்யர் போர் புரிவதைப் பார்த்து அலுத்துப் போயும், மதச் செருக்கினால் மொகலாயர் குருவினிடம் சமாதானம் பேசத் தூதர் அனுப்பிய போது ஹிந்து தர்மத்தை விட்டு இஸ்லாம் தர்மத்தைத் தழுவவேண்டும் என்று ஓர் நிபந்தனை கண்டு, அவ்வாறு தழுவினால் அவனுக்கு மொகலாய சைனியத்தில் ஓர் சேனாதிபதி ஸ்தானமும் தருவதாகச் சொல்லியனுப்பினார்கள். ஆனால் இந்த வார்த்தைகளைத் தூதர் கூறியதும் குருவின் மூத்த மகனான அஜீத சிங்கன் கோபாக்கிராந்தனாகி அவர்களைக் குருவினிடம் போகவிடாமல் தானே அவர்களைக் கண்டித்து அனுப்பிவிட்டான். மறுபடியும் போர் மும்முரமாக நடந்தது. அஜீத சிங்கனும் அவனது சகோதரனான ஜுஜார சிங்கனும் முன்னணியிலேயே போர் செய்து குருவின் கண்ணெதிரேயே ஷஹீதாயினர்.* ஆனால் இம்முறையும் வெற்றி மொகலாயரிடமே நின்றது. மிகுதி நின்ற வீரர்களோடு குரு சம்கௌடத்தினின்று தப்பியோடும்படி யாகிவிட்டது. போகும் வழியில் கோவிந்தன் சில பட்டாணிகளின் கையில் அகப்பட்டான். ஆனால் அவனது வீரத்தையும் அஞ்சா நெஞ்சத்தையும் தெய்வ பக்தியையும் பற்றிக் கேள்வியுற்றிருந்த அவர்கள் அவனுக்கு உபசாரங்கள் செய்து அவனைப் பேலால்பூர் என்ற இடத்துக்குக் கொண்டு போய் விட்டார்கள். அங்கேயும் குரு மகாராஜனும் அவனது படையும் பீர்முகம்மது என்ற ஓர் முஸ்லீமினாலேயே ரக்ஷிக்கப் பட்டார்கள்.† அங்கே தான் அவன் முஸ்லீம்கள் சமைத்த அன்னத்தை உண்டு, ஆபத் காலத்தில் இதர மதத்தினரிடம் அன்னமும் உண்ணலாம் என்று தன் சிஷ்யர்களுக்கு விதியும் வகுத்து வைத்தான்.

பிறகு முஸ்லீம்கள் உடுத்திக்கொள்கிறது போன்ற நீல வர்ண உடை தரித்துக் கொண்டு வேற்றுருவம் தாங்கிக்கொண்டு குரு பூதிந்தாப் பாலைவனத்துக்குச் சென்றான். கலைந்து போன சிஷ்யர் அங்கே வந்து அவனோடு சேர்ந்து கொண்டார்கள். அங்கு நின்றும் சத்துருக்களின் தளங்கள் அவனை நெருக்க, அவன் ஓடி ஓடிச் சென்று கடைசியாய்ச் செல்லிடம் ஒன்று கண்டு அங்கு தன் படைகளை நிறுத்தி, நெருக்கிய படைகளை எதிர்த்துத் தாக்கினான். அங்கே சத்துருக்கள் தோற்றுப் போயினபடியால் அந்த இடத்திக்கு முக்திசரஸ் என்கிற பெயர் வைக்கப்பட்டு இன்றைக்கும் வழங்குகிறது. கடைசியாக ஹன்ஸிக்கும் பெரோஜபூருக்கும் இடையிலேதான் தொடரும் சத்துருக்களின் படை

---

* ஷஹீது—தர்மத்துக்காகப் பிராணனைக் கொடுக்கிறவன். அஜீத சிங்கனுக்கு அப்பொழுது வயது பதினெட்டும் ஜுஜார (ஜுஜ்ஹார) சிங்கனுக்குப் பதினான்கும் ஆகியிருந்தது.

† குரு கோவிந்தன் தான் படிக்குங் காலத்தில் இந்தப் பீர்முகம்மது அவனுக்குச் சகபாடியாக இருந்தான். அவன் சிறந்த முஸ்லிமாயுமிருந்தான்.

முற்றிலும் முறியடிக்கப்பட்டுப் போயிற்று. அங்கு
தான் முதல் முதல் குருவுக்கும் சிஷ்யர்களுக்கும் இந்தப்
போரில் மூச்சு விடச் சாவகாசம் ஏற்பட்டதால் அவ்
விடத்துக்குத் தம்தமா என்ற பேர் சிஷ்யர்களால் வைக்
கப்பட்டது. குருவின் சைனியமும் மிகமிகக் குறைந்து
போய்விட்டபடியால் மொகலாய சேனாதிபதிகள் குருவி
னால் இனி ஒன்றும் செய்ய முடியாது என்று நினைத்துக்
கொண்டு தங்கள் தலைமை ஸ்தானத்தை நோக்கித்
திரும்பிவிட்டார்கள்.

குரு தம்தமாவில் இருந்துகொண்டு சிஷ்யரை
யெல்லாம் ஓலை அனுப்பி வருவித்து மறுபடியும் போர்
தொடங்க ஏற்பாடுகள் செய்யத் தலைப்பட்டான். அதே
காலத்தில் தான் ஏற்கனவே கவனம் செய்த கீர்த்தனை
களைத் தொகுத்தும், புதிய கீர்த்தனைகள், ஸ்தோத்திரங்
கள் முதலியன எழுதியும், ஓர் புதிய கிரந்தத்தை
யாத்து வைத்து, தான் முன்னமே எழுதத் துவக்கி
யிருந்த விசித்திர நாடகத்தையும் முடித்தான். அந்
நாடகத்தின் இறுதியில் காணப்படும் அகால புருஷ
ஸ்தோத்திரம் படிப்போருக்கு மயிர்க் கூச்செறிவிக்கிறது.
தனது வெற்றிகளுக்கும், மகா பெரிய அபாயங்களி
னின்று தப்பி அறத்திற்காகப் போர் புரிய இன்னமும்
தான் தயாராக இருப்பதற்கும் அகால புருஷனுடைய
திருவருளும் தனது வாளுமேதான் காரணம் என்று
அவன் வியந்து கூறிக் கடவுளை ஸ்தோத்திரம் செய்
கிறான்.

இவ்வாறு தம்தமாவில் குரு இருந்து வரும் நாளில்
ஔரங்கஜேபு அவனிடம் தூதரை அனுப்பி அவனைத்
தான் பாசறைக்கு அழைத்தான். ஆனால் கோவிந்தன்
மொகலாயர் செய்து வந்த அக்கிரமங்களையும், ஔரங்க
ஜேபு தனக்கும் தன் தந்தைக்கும் இழைத்த இன்னல்
களையும் கூறிக் கண்டித்து, "உன்னிடம் நான் வரவேண்
டிய அவசியமேயில்லை: என் நான்கு புத்திரர்களையும்
உன்னோடு நான் செய்த போர்களில் பலி கொடுத்திருக்
கிறேன்: உனக்கும் எனக்கும் சிநேகம் உண்டாகாமல்
தடுக்க அவர்களது இரத்தமும் என் தந்தை தேகபகதூ
ருடைய இரத்தமும் இடை நின்று கூறுகின்றன. இந்த
வயது காலத்தில் குழந்தைகளை இழந்து, கிளையற்ற மரம்
போல நிற்கிறேன். ஆனால் எனது காலஸாவே எனது
சந்ததி. அந்தக் காலஸா உன் ராஜ்ஜியத்தைத் தகர்த்
தெறியப் போகிறது! வாஹ குருகி காலஸா!" என்று
பதில் எழுதி யனுப்பி விட்டான்.

ஔரங்கஜேபு கலி 4809ல் தன் பாசறையில் மன
முடைந்தவனாகவே இறந்துவிட்டான். அக்காலத்தில்
காபூலிலிருந்த அவன் மகனான பஹதூர் ஷா பெரிய
படையுடன் ஹிந்துஸ்தானத்துக்கு வந்து, தன்
சகோதரர்களைப் போரிற் கொன்று தில்லிச் சிங்காதனத்
தில் ஏறினான். பகதூர் ஷாவுக்குக் கோவிந்தன் மீது
அபார மதிப்பு உண்டு. ஒரு சிறிய படையை
வைத்துக்கொண்டு ஏகாதிபத்திய சைனியங்களோடு
பதின்மூன்று வருஷ காலம் இடைவிடாமல் போர்
செய்த மகா வீரனை எவ்வாறு மெச்சாமல் இருத்தல்
சாத்தியம்? ஆகவே பஹதூர்ஷா அவனோடு அவனு
டைய கௌரவத்துக்கேற்ற நிபந்தனைகளே செய்து
கொண்டு, சமாதானம் செய்துகொள்வதாகச் சொல்லி,
இடையில், கோதாவரிக் கரையோரம் ஏகாதிபத்தியத்
துக்காகப் படைகளுடன் சென்று சத்துருக்களைத்
தாக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டான். மொக
லாயர் சிஷ்யர்களை ஹிம்சியாமலிருக்கச் சம்மதிக்கிறார்
கள் என்பதற்கு இது ஓர் அறிகுறி என நினைத்துக்
குரு அதற்கு இசைந்து தன் படையை அழைத்துக்
கொண்டு தெற்கு நோக்கிப் புறப்பட்டு விட்டான்.

இக்காலத்தில் குருவினது சீலத்தையும் வீரத்தை
யும் கண்டு குருவுக்குத் தொண்டு செய்தே தன் காலத்
தைக் கழிக்கவேண்டுமென்று உறுதிகொண்டு தென்
னாட்டுப் பிராமணன் ஒருவன் அவனை ஆசிரயித் திருந்
தான். குருவும் அவனது பலத்தையும் மனோதிடத்
தையும் சாமர்த்தியத்தையும் கண்டு வியந்து அவனைத்
தன் சேனா நாயகனாக்கிக் கொண்டிருந்தான். அந் நாய
கன் தன் பெயர்கொண்டே தன்னை ஒருவரும் அழைக்க
படாது என்றும், பந்தா—குருவின் அடிமை—என்று
தான் அனைவரும் தன்னை அழைக்க வேண்டும் என்றும்
கூறி வந்ததால், அவனது பெயர் பந்தா என்றே வழங்க
லாயிற்று. அவனது இயற்கைப் பெயர் உலகினுக்கே
மறந்து போயினது போலும்.

கோவிந்த சிங்கன் மெல்ல மெல்லத் தெற்கு
நோக்கி வந்து கோதாவரிக் கரையிலுள்ள நதேடம்
என்ற இடத்திற்கு வந்து சேர்ந்தான். ஆனால் திடீரென
அவனது ஆயுள் அங்கு கத்தரித்துப் போய்விட்டது.

ஓர் காலத்தில் பட்டான் நாட்டுக் குதிரை வியா
பாரி ஒருவன் தன்னை அவமதித்ததற்காகக் கோவிந்தன்
அவனைத் தன் வாளால் கொன்றுவிட்டிருந்தான். ஆனால்
அந்த பட்டாணியின் மைந்தர் நிர்க்கதியா யிருத்
தல் கண்டு அவன் அவர்களைத் தன் குழந்தைகளைப்
போலவே வளர்த்து வந்தான். அன்னவர்கள் வயதான
பிறகு தங்கள் தகப்பன் குருவினால் கொல்லப்பட்டுப்
போயினான் என்று கேள்வியுற்ற தினத்திலிருந்து
கோவிந்தனைக் கொன்று பழி தீர்த்துக்கொள்ள வேண்டு
மென்று கறுவிக்கொண்டே வந்தார்கள். கடைசியாக,
நதேடத்திற்குக் குரு வந்து சேர்ந்த காலத்தில், அற்றம்
பார்த்துக்கொண்டு வந்த பட்டாணி வாலிபர் குரு தனி
யாக இருந்த நேரம் பார்த்து அவனைத் தம் கூரிய
வாளால் மர்மத்தில் வெட்டி விட்டார்கள்.

குரு வெட்டுண்ட செய்தி தெரிந்ததும், ஓடிப்
போன பட்டாணியரைச் சிஷ்யர் தேடிப் பிடித்துக்
குருவின் முன்னர் நிறுத்தினார்கள். "உங்களைக் குழந்
தைகளைப் போலவே வளர்த்தேனே, ஏன், அப்பா,
என்னைத் தாக்கினீர்கள்?" என்று கோவிந்தன் அவர்
களைக் கேட்டான். அதற்கு அவர்கள், "நீ எங்களைத்
தந்தை போலவே வளர்த்துவந்தாய் என்பதில் தடை
யில்லை. அதனால் எங்களுக்கும் உன்மீது அபாரமான
வாஞ்சை யிருந்தே வந்திருக்கிறது. ஆனால் நீ எங்கள்
தகப்பனைக் கொன்றாய் என்கிற சங்கதி எங்களுக்குத்
தெரிந்த தினத்திலிருந்து, அந்தப் பழியைத் தீர்த்துக்
கொள்ளவேண்டும் என்கிற எங்கள் வர்மமும் உன்
பேரில் எங்களுக்குள்ள அன்பும் ஒன்றோடொன்று
போர் செய்யத் தலைப்பட்டன. கடைசியில் எங்கள்
வர்மமே வென்றது. எங்கள் பழியைத் தீர்த்துவிட்
டோம். ஆனால் எங்களை அன்போடு வளர்த்துவந்த

உன் உயிரை வாங்கியே அப்பழியைத் தீர்த்துக்கொள்ள வேண்டியதாயிருந்தது எங்கள் துரதிருஷ்டமே: உன்னைக் கொன்ற பாதகத்துக்காகச் சிஷ்யர் எங்களைக் கொன்றுவிடுவதே முறை: இதோ எங்கள் வாட்களைக் கீழே போட்டுவிடுகிறோம், எங்களைக் கொன்று விடும்படி சிஷ்யருக்கு ஆணையிட்டுவிடு," என்று சொல்லித் தங்கள் வாட்களை உறையோடு கீழே போட்டு விட்டார்கள்.

சிஷ்யர்கள் குருவினது ஆணையை எதிர்பார்த்து நின்றார்கள். ஆனால் குரு புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டு, "குழந்தைகளே, நீங்கள் செய்தது நியாயமே: என் தகப்பனைச் சிரச்சேதம் செய்ய ஆக்ஞாபித்த ஔரங்கஜேபின் தலையைச் சிதைக்கவேண்டும் என்கிற ஆவல் எனக்கு அளவு கடந்து இருந்திருக்கும்போது நீங்கள் என்னை வெட்டியதைக் கண்டு நான் எவ்வாறு கோபிப்பேன்? நீங்கள் செய்த காரியம் சரியே," என்று பட்டாணிகளிடம் கூறி, சிஷ்யர்களைப் பார்த்து, "இவர்களை விட்டுவிடுங்கள், அவர்கள் எங்கு வேண்டுமானாலும் போகட்டும்!" என்று சொன்னான். பட்டாணிகளும் அவன் காலில் வீழ்ந்து வணங்கிவிட்டு அக்கூட்டத்தை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டார்கள்.

சிஷ்யர்கள் குருவின் பாதத்தில் வீழ்ந்து, "எங்களை அநாதைக் குழந்தைகளைப் போல விட்டுவிட்டுச் செல்லுகிறாயே! ஏ குருதேவனே, நாங்கள் இனி என்ன செய்வோம்? யாரைக் குருவாகக் கோருவோம்! யார் தாம் உன்னைப்போல எங்கள்மீது கருணை மழை பொழிந்துகொண்டு எத்தகைய இடுக்கண்களுக் கிடையிலும் எங்கள் மனம் சோராமற் காப்பார்?" என்று கதறினார்கள். குரு அவர்களைத் தேற்றி, "புத்திரர்களே, கவலைப்படாதீர்கள்! நான் அல்லன் உங்களுக்குப் பலமும் தைரியமும் தந்து வந்தவன்: அகால புருஷனது அருள்தான் உங்களது திண்மைக்கும் அஞ்சாமைக்கும் காரணம் என்பதை நன்கு உணருங்கள்: குருக்களின் பரம்பரையும் என்னோடு தீர்ந்துவிட்டது: இனி குருவைப் பார்க்க விரும்புபவர் நானக தேவனது கிரந்த சாஹிபைப் * பார்க்கட்டும்! ஈசுவரன் காலஸாவை ரக்ஷிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கிறான்: பந்தாவின் தலைமையின்கீழ் நின்று நீங்கள் அறத்தைக் காவுங்கள். ஐந்து சிஷ்யர்கள் நடு நிலைமையோடு, மனச் சாந்தியோடு எங்குக் கூடியிருக்கிறார்களோ அங்கு அவர்களுக் கிடையே நான் சூக்ஷ்மதேஹியாக இருப்பேன் என்று உங்களுக்கு வாக்குக் கொடுக்கின்றேன்: என் குழந்தைகளே! இனிச் சென்றுவருகிறேன்: சொல்லுங்கள், அகால புருஷனுக்கு ஜயம்! வாஹ குருகி காலஸா! வாஹ குருகே பத்தே!" என்று கூறி நிறுத்திக்கொண்டான். பிறகு சற்று நேரம்தான்; அவனது ஆத்மா எந்த அகால புருஷனது திரு முன்னர் நின்று தர்ம சம்ஸ்தாபனத்துக்காக இப் பூவுலகில் இறங்கியதோ அந்தச் சன்னிதானத்துக்கே திரும்பிப் போய்ச் சேர்ந்து விட்டது!

* சிஷ்யர் நானகனுடைய கிரந்தத்தை மரியாதையாகக் கிரந்த சாஹிப் என்று குறிக்கிறார்கள். நம்முள்ளும் நாலடியார், திருக்கோவையார் என்ற பெயர்களை நோக்குக.

முடிவுரை

குரு கோவிந்தனுடைய வாழ்க்கை விபலமாகப் போயிற்று என்று சிலர் கருதலாம். ஆனால் அறிந்தவர் அவ்வாறு கருதமாட்டார்கள். அவன் தன் சிஷ்யர்களை வைத்துக்கொண்டு பெரியதோர் யுத்த களத்தில் ஏகாதிபத்திய சைனியத்தை ஓர் முறைகூட முறியடிக்கவில்லை என்பது வாஸ்தவம். சிஷ்யரை ஓர் தனி ராஷ்டிரமாக, ஓர் தனிக் கணமாக, அவன் அமைத்துவைக்கவில்லை என்பதும் உண்மை. ஆனால் அவன் இறந்த உடனேயே சிஷ்யர்களின் படையைத் திரட்டிக்கொண்டு பந்தா ஸரஹிந்தைத் தாக்கி ஸுபேதாரை வென்று அந்நகரைச் சூறையாடினான். பந்தா மொகலாயர் வசம் அகப்பட்டுத் தர்ம பலியான பிறகு சிஷ்யர் இருக்குமிடந் தெரியாமல் பதுங்கி யிருக்கவேண்டி வந்தாலும், ஓர் ஐம்பது வருஷத்துக்கெல்லாம் காலஸா மறுபடியும் தலை யெடுத்துப் பஞ்சாபிலும் காஷ்மீரத்திலும் ஓர் பெரிய ராஜ்ஜியத்தை ஸ்தாபித்தது. ரணஜித சிங்கன் ராஜரீக விஷயங்களில் சுவச்சந்த அதிகாரத்தை வகித்தானானாலும் தார்மிக விஷயங்களில் காலஸாவுக்குக் கட்டுப்பட்டே நடந்தான். அவன் செய்த சில குற்றங்களுக்காகக் காலஸா அவனுக்கு விதித்த சாட்டையடியை அவன் சந்தோஷமாக ஏற்றுக்கொண்டான். அவன் காலத்துக்குப் பிறகு கிழக்கிந்திய சங்க உத்தியோகஸ்தரின் சூழ்ச்சியினாலும் சில சிஷ்யர் தலைவரின் பணத்தாசையாலும் சிஷ்யாது ராஜ்ஜியம் ஆங்கிலர் வசம் வந்துவிட்டது. ஆனால் இன்றைக்கும் சிஷ்யர் ராஷ்டிரிய, தார்மிக உணர்ச்சி நிரம்பிய, ஏக ரூபமான கட்டுப்பாடுள்ள ஓர் கூட்டமாக நிற்கிறார்கள் என்பது எல்லோரும் அறிந்த விஷயம். அகாலியரின் சக்தி நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது என்று பத்திரிகை வாசிக்கிறவர் அனைவரும் அறிவர். அவர்களை இனி என்றைக்கும், யாராலும் நசுக்க முடியாது. சாமானிய ஜனங்களைச் சேர்த்து, ராஜாளிகளை அடிக்கும் வன்மையைக் குருவிகளுக்குத் தருகிறேன் என்று தான் செய்த சபதத்தின் பிரகாரம் அவர்களை அசகாய சூரர்களாக்கி, தான் இறந்து இருநூறு வருஷங்களுக்கு மேலாகியும் தன் முத்திரை அன்று வைத்தபடியே நிலைத்து நிற்கும்படி செய்த சக்தி குரு கோவிந்தனதே. இவ்வாறு தனது ஆத்ம சக்தியனைத்தையும் தன் சிஷ்யரிடத்தில் வியாபிக்கும்படி செய்த வன்மை சரித்திரத்தில் முகம்மது நபி—ஸல்லல்லாஹு அலைஹிவஸ்ஸல்லம்—ஒருவனுக்குத்தான் நமக்குத் தெரிந்த மட்டில் உண்டு.

ஸத் ஸ்ரீ அகால்

வ. வே. சு. அய்யர் எழுதிய

மங்கையர்க்கரசியின் காதல்

முதலிய கதைகள்

விலை அணா 8

சுதந்திரச் சங்கு புத்தகசாலை,

திருவல்லிக்கேணி, சென்னை.

'முன்போலே இருக்கேளா ?'

(தி. ஜ. ர. எழுதியது)

இடுப்பிலே தண்ணீர்க்குடம். மனத்திலே எருமைக்கன்று. ஆசையோ பால்மேலே. நாவிலிருந்து புறப்படுகிறது சௌஷ்டிகம். "முன்போல இருக்கேளா?" என்கிறாள் தங்கம். வேற்றூரிலிருந்து வந்த தோழியை விசாரணை செய்கிறாளாம் தங்கம். அதில் குத்தல் செய்து விடுவதாக இவள் எண்ணம். ஏமாற்றிக்கூட விடுகிறாளாம்.

* * *

"நீங்கள் முன்போல, இருக்கேளா? கூட்டாக்கூட எங்காத்துக்கு வரமாட்டேங்கறேள்" என்று தளுக்கிக் குலுக்குகிறாள். தோழி இவள் வீட்டுக்கு வரக் காத்துக்கொண்டிருக்கவில்லை; இவளிடம் 'அட்மிஷன் டிக்கட்' கேட்கவுமில்லை. என்னவோ குளத்தங்கரையில் கண்டவள், பழய சிநேகிதியோடு சிறிது பேசலாமென்று நின்றாள். தங்கத்தின் சுயநலத்தையும் சுகவாழ்க்கையையும் பற்றி விளம்பரம் செய்ய வேண்டுமோ அவளிடம்?

* * *

அர்த்தமற்ற வார்த்தைகளுக்கு, அர்த்தம் கற்பிக்க லாகாதுதான். ஆனால், சொல்லுபவன் மனது சுத்தமாயில்லாததை சமயமும் அபிநயமும் சொரூபமும் காட்டிவிடுகின்றனவே! குழந்தை கேட்கிறது. "அப்பா, நேத்திமாதிரி ஓடேன்?" என்பது அதன் கேள்வி.

* * *

நேற்றைக்கு அந்தப் பணக்காரச் செட்டியார் வந்திருந்தார். 'மோட்டாக் காடி'யில் எனக்கு இடம் கிடைத்தது. மோட்டார் ஓடிற்று. டிரைவரோ, நானோ, செட்டியாரோ ஓடவில்லை; ஆனாலும், எங்களுக்குத் தூரமும் நேரமும் கழிந்து மறைந்தன. நான் ஓடினேன் என்பது குழந்தையின் எண்ணம். "முன்போல ஓடேன்" என்று அது சொல்லுகிறது. இந்த வார்த்தைகளைக்கேட்டு, நீங்களும் நானும் உள்ளம் பூரிக்கிறோம்; அர்த்தம் கற்பிக்கவில்லை. தங்கமோ, பின்னே வரப்போகும் பண்டிதரோ அப்படிப்பட்டவர்கள் அல்ல.

* * *

புதிய வியாபாரி வந்துவிட்டான். இதுவரையில் பழைய வியாபாரியிடம் பற்று வைத்துக்கொண்டிருந்த பண்டிதர், அவனிடம் சேர்ந்துவிட்டார். விளம்பரம் வேண்டுமென்பது புதிய வியாபாரியின் ஆசை. அதற்கு ஏற்ற மனிதர் இந்தப் பண்டிதரே என்பது அவன் எண்ணம். ஊருக்கெல்லாம் ஒரு அணுவுக்கு விற்கும் சாமான் பண்டிதருக்கு அரையணு. இப்படியானல், பண்டிதர் புதிய வியாபாரியைப்பற்றி எங்கும் பிரசாரம் செய்யலாம்; நன்றியறிதல். ஆனால், பழய வியாபாரியிடமும் புதிய விளம்பர பாஷையில் பேசலாமோ?

* * *

"ஸார், நீங்கள் முன்போல இல்லை" என்கிறார் பண்டிதர். 'கொல்லத் தெருவிலா ஊசிவிற்பது?' பண்டிதரைப் பூர்த்தியாய்ப் புதிய வியாபாரி பயன்படுத்திக் கொண்ட பிறகு நடக்கப் போகும் சங்கதி பழைய வியாபாரிக்குத் தெரியும். புதிய கடையும் பண்டிதருக்குப் பழைய கடையாக மாறப்போகும் காலம் தலைக்குமேலே வந்துகொண்டிருக்கிறது. கால நதிக்குக் கோடையும் வறட்சியும் கிடையாது. இருந்தாலும் காலத்துக்கேற்றபடி மாறிக் கொள்ளலாம் என்பது பண்டிதரின் தைரியம். போகிறார், நாம் பொறாமைப்பட வேண்டாம். ஆனால், ரகசியத்தை மறைக்கமுடியாது.

* *

எப்படி யிருந்தாலும், சரி; "முன்போ லிருக்கேளா?" என்பது ஒரு பேச்சல்ல. சில சமயம் அரைப்பேச்சா யிருக்கலாம்; ஆனால், முழுப்பேச்சல்ல. முன்போல, யார் இருக்கிறார்கள், எது இருக்கிறது? ஐந்து வயதில் தந்தையின் தோள்மீது விளையாடிய குழந்தை, ஐம்பது வயதில் அப்படி யில்லையே என்று இரங்கலாமோ? தந்தை, தநயன் உறவு மாறவில்லை. ஆனால், அதன் வெளியீடுகள் மாறிவிட்டன.

* * *

தேசத்தைப் பாருங்கள். ஒரு வருஷத்துக்கு முன்னிருந்தபடி இன்று இருக்கிறதா? ஒரு வருஷத்துக்கு முந்திய பேச்சில் சிலவற்றை இன்று பேசினால், அது கேலியும் அவமானமும் ஆகும். போர்க்களத்திலே, "போ, மேலே" என்றால், அதன் அர்த்தம் எல்லாருக்கும் புரியும். போரில் காலுங் கையும் முறிந்த வீரன் படுத்துக்கிடக்கும் ஆஸ்பத்திரிக்குள் புகுந்து "போ, முன்னே" என்று புகலுபவன் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குத்தான் அனுப்பப்படுவான்.

* * *

வாழ்க்கையும் வளர்ச்சியும், உறவுகளையும் தொடர்புகளையும் மாய்ப்பதில்லை; ஆனால், மாற்றி விடுகின்றன. நேற்றும் இன்றும் ஒன்றல்ல. நேற்றைய இன்றைய நிகழ்ச்சிகளுக்குள்ளே ஒரு தொடர்ச்சி யுண்டு என்பதை மட்டில்தான் மறுக்கமுடியாது. இந்தத் தொடர்ச்சியை அழித்தால் வாழ்வே அழிந்துவிடும். அதற்காக, வளர்ச்சியை விட்டுவிட முடியாது. எனவே, "முன்போல இருக்கேளா?" என்பது என்ன பேச்சோ?

இந்தியாவில் மிகச் சிறந்தது

7
அளவுகள்
1, 2, 4, 6, 8, 12, 16
பேர்களுக்கு
ரூ. 10, 14, 18, 23, 29, 35, 41.
சிலோனில் முக்யமான ஊர்களுக்கு ஏஜண்டு தேவை.
!

சகல விதமான சமையலுக்கும் சர்வ சம்மதமாய், செலவுச் சுருக்கம் சிக்கனம், செம்மை உணவு ருசி, முதலிய எல்லா சௌகரியங்களும் பொருந்திய தெனச் சிறந்து விளங்கும்
ருக்மணி குக்கர்
சமையலடுக்கு உங்களுடைய வீட்டிலிருக்க வேண்டாமா?
விபர புத்தகம் இனம்.
ருக்மணி குக்கர் கம்பெனி
இராயபுரம்.(10), சென்னை.

குறிப்புகள்

கடைசியில் கை விரிப்பு

மோகனம் பாடினார் வித்வான். "என்ன இனிமை! போடப்பா ஒரு தங்கத் தோடாவை" என்றார் பிரபு. பாடகருக்குப் பரம சந்தோஷம். மேலே ஒரு பாட்டை இழைத்துத் தள்ளிவிட்டார். பிரபு, "சால்வை யொன்றைப் போர்த்தடா" என்றார். இன்னுமொரு பாட்டு. அதற்கு மொரு தித்திக்கும் சன்மானத்தைச் சொன்னார் பிரபு. இப்படி மேலும் மேலும் படிப்படியாகப்போய்க் கடைசியில் "கனகாபிஷேகம் செய்" என்று கதறினார் பிரபு. வித்வானுக்குத் திருப்தி, களைப்பு, அகமகிழ்ச்சி மூன்றும் சேர்ந்தது. ஓய்ந்து உட்கார்ந்திருந்தார். ஒரு மணியாயிற்று; இரண்டு மணியாயிற்று. சன்மானங்களின் வாசனையைக்கூடக் காணோம். "பிரபோ, தாமதமாகிறதே" என்றார் வித்வான். "போகலாமே" என்று உதட்டுக்குச் சிரமங் கொடுக்காமல் மூக்கினால் பதிலிறுத்தார் பிரபு. "சன்மானங்களைக் காணோமே" என்று கேட்டார் பாடகர். "என்னங்காணும்? நீர் செய்து கிழித்த வேலை என்ன? பாடினீர்; என் காது குளிர்ந்தது. சன்மானங்களைச் சொன்னேன்; உமது காது குளிர்ந்தது. சரிக்குச் சரியாய்ப் போயிற்று" என்று உறுமினார் அந்தக் கருமிப் பிரபு. இந்தக் கதை மாதிரி யிருக்கிறது பிரிட்டிஷ் சர்க்காரின் ஒரு வேலை.

இந்தியப் பஞ்சு தவியாய்த் தவிக்கிறது. அதைத் தங்கள் நாடு ஏராளமாய் வாங்குவதற்கு என்னென்னவோ ஏற்பாடுகள் செய்வதாகத் தித்திக்கத் தித்திக்கச் சொல்லி வந்தது பிரிட்டிஷ் துரைத்தனம். இதை நிஜம் என்று சில இந்திய முதலாளிகள் நம்பிக் கொண்டு, ஜப்பானோடு தகரார்கள் செய்தார்கள்; பிரிட்டிஷ்காரரான லங்காஷயர் முதலாளிகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டார்கள். அதன் பயனாகப் பிரிட்டிஷ் சாமான் ஏராளமாக இந்தியாவில் விற்பனையாவதாகச் சில பிரிட்டிஷ் பத்திரிகைகள் கொம்மாள மடிக்கின்றன. ஆனால், "இந்தியப் பஞ்சின் கதியென்ன? அதை லங்காஷயர் முதலாளிகள் அதிகமாய் வாங்குவதற்கு என்ன ஏற்பாடுகள் செய்யப்பட் டிருக்கின்றன?" என்று பார்லிமெண்டில் ஒருவர் கேட்டால், மிஸ்டர் ரன்ஸிமான் என்ற பிரிட்டிஷ் மந்திரி என்னென்னவோ கொட்டிக் குளறுகிறார். அந்தப் பதில்களின் திரண்ட சாரம் என்ன? "ஒன்றும் செய்யவில்லை" என்பதுதான். இது அழகாகுமா?

கிராமபோன் ரிகார்டுகள்

எல்லாத் தேசத்திலும் கிராமபோன் ரிகார்டுகள் தயாரிக்கப் படுகின்றன. ஸோவியத் ருஷியாவிலும் ரிகார்டுகள் தயாராகின்றன. ஆனால் ருஷியா தயாரிக்கப் போகும் ரிகார்டுகள் வெறும் பாட்டும் ஹாஸ்யமுமாக மட்டும் இருக்கப் போவதில்லை. அங்கு தயாரிக்க விருக்கும் சில ரிகார்டுகள் பின் வருமாறு:—

1. ஸப்மரைன் என்ற நீர் முழுகிக் கப்பலின் தலைவனான கிரீலோவ் அவரது படையின் பராக்கிரமங்களைப் பற்றி விவரிக்கும் சில ரிகார்டுகளைத் தருவார்.

2. புகைக் கூண்டில் ஆகாய கமனம் செல்வதில் தாம் அனுபவித்தவைகளைப் பற்றி 'பிரோகோவி' பேசுவார்.

3. ஸ்டாலி மலைமீது தமது கோஷ்டி ஆரோகணித்த கதையைப் பற்றி, 'சோர்புனல்' பேசுவார்.

இத்தகைய பராக்கிரமச் செயல்களை விவரிக்கும் ரிகார்டுகளைத் தயாரிப்பதால் தேசீய உணர்ச்சி பெருகு மென்பதைச் சொல்ல வேண்டுமோ?

காமக் கட்டுரைகளே ஜாக்ரதை!

பம்பாயில் தியேட்டர் என்ற ஒரு மாசிகையில் அசங்கியமாகக் காமச் சுவை மூட்டும் மூன்று கதைகளைப் பிரசுரித்தாரென்று குற்றஞ் சாட்டப்பட்டு ரதிலால் சுகல்ஷா என்ற ஆசிரியர் நிறுத்தப்பட்டார். முதலில் 9 மாதக் காவல் தண்டனையும் 300 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. பிறகு ஆசிரியர் பன்முறை மன்றாடிக் கேட்டுக் கொண்டதின் பயனாகத் தண்டனை குறைக்கப்பட்டது. காமாதுரமான கட்டுரைகளை எழுதிக் குவிப்பவர்களுக்கு இந்த வழக்கு எச்சரிக்கையாகுமா?

பசு

[பசு மிகவும் உபயோகமான மிருகம். அதன் பெருமையை அதனிடத்திலேயே நம்மிலொருவர் கூறுவதாகச் செய்யப்பட்டுள்ளது இக்கவி.]

பச்சைப் புல்லைத் தின்று வெள்ளைப்
பால் தர நீயென்ன
பக்குவஞ் செய்வாய்? அதனைப்
பகருவையோ? பசுவே! (1)

உச்சியுடல் நக்கி யீன்ற
உடனுனது கன்றை
உயிரெழுப்பு மாயமெதோ?
உரைத்திடுவாய் பசுவே! (2)

வாய்க்கினிய பால் தருவாய்,
வயற்குரமும் தருவாய்,
வண்டிச் சட்டக் காலையும் நீ
வளர்த்தளிப்பாய் பசுவே! (3)

தாயில்லாப் பிள்ளைகட்குத்
தாயாவாய், நோயால்
தளர்பவர்க்கு மருத்துவச்சி
தானாவாய் பசுவே! (4)

—தேசிக விநாயகம் பிள்ளை பாடியது.

நந்தனார் கீர்த்தனைச் சுருக்கம்

(தொகுத்தவர்: சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்)

விலை அணா 2.

கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளில் முக்கியமான பலவற்றையும் ராஜாஜீ பொறுக்கித் தொகுத்திருக்கிறார். மாஜி ஹைகோர்ட் ஜட்ஜி வி. பாஷ்யம் அய்யங்காரின் நேர்த்தியான முகவுரையுடன் கூடியது. சுத்தமான பதிப்பு. டெம்மி 1×8 அளவில் 50 பக்கங்கள்.

சுதந்திரச்சங்கு புத்தகசாலை,
திருவல்லிக்கேணி, சென்னை.

வரப்பெற்றோம்

கலியுகப் பிரகலாதன்

ஜீவகாருண்யப் பிரசாரத்துக்காக தென்னிந்திய ஜீவரக்ஷா பிரசாரக சபையின் சொற்பொழிவாளரான ஸ்ரீயுத T. S. ஸ்ரீபால் அவர்கள் இதை ஆக்கியுள்ளார். பிரசாரத்துக்கு இது ஏற்ற நாடகமென்றே சொல்லவேண்டும். விலை அணா 8 தான்.

கிடைக்குமிடம் :—தென்னிந்திய ஜீவ ரக்ஷாப் பிரசாரக சபை,
436, தங்கசாலை வீதி, சென்னை.

இஸ்லாமிய சரித்திரத் திரட்டு

சில இஸ்லாமியப் பெரியார்களின் வாழ்க்கைச் சம்பவங்களும் பகுதாத் போன்ற சில நகரங்களின் விவரணங்களும் இதில் அடங்கியுள. இந்தச் சிறிய நூலைப் படிக்கும்போது இதில் கூறப்பட்டுள்ள பெரியார்களின் முழு விவரமும் அறியவேண்டு மென்ற அவா ஏற்படும். இந்தப் புத்தகத்தின் விலை நாலணாத்தான்.

கிடைக்குமிடம் :—அப்துல் மஜீத்,
நாச்சியார் கோவில்.

இஸ்லாத்தின் கோட்பாடுகள்

இஸ்லாம் மதம் போதிக்கும் சிறந்த தர்மங்களைச் சுருக்கமாக இந்த நூலில் தொகுக்கப்பட் டிருக்கிறது. ஸ்திரீ சுதந்திரம், ஈமான் அல்லது நம்பிக்கை, முகம்மது நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை முதலியவை குறிப்பிடத் தக்க அத்தியாயங்கள். விலை 5 அணாத் தான்.

கிடைக்குமிடம்:—
இஸ்லாமியா புக் டிபோ,
நாச்சியார் கோயில்.

ஆயிர வருஷத்திய காலண்டர்

வேடிக்கையார்த்தமாகவாவது இந்தக் காலண்டரை வாங்க வேண்டு மென்ற எண்ணம் சிலருக்கு ஏற்படலாம். மேலும் இது பிரசார நோக்கத்தோடு போடப்பட்டிருக்கிறது.

காலண்டர் விலை அணா 1.
உயிர் இரக்க நல்வழி மன்றம்,
22, விணதீர்த்த விநாயகர் கோயில்
தெரு, பிரம்பூர் பாரக்ஸ், சென்னை.

இன்னும் தண்டமா?

"நாம் இதைக் கேட்கத் திடுக்கிட்டுப் போனோம். பூகம்பத்தால் பாழான மாங்கீர் ஜில்லாவில் பாகிர் என்பது ஒரு ஊர். அது 17 ஆயிரம் ஜனங்களைக் கொண்டது. இங்கே தண்டப்போலீஸ் வரியைச் சர்க்கார் இன்னும் வசூலித்துக் கொண்டிருக்கிறதாம்; ஆடுமாடுகளையும் ஜங்கம சொத்துக்களையும் ஜப்தி செய்கிறதாம். சட்ட மறுப்புக் காலத்தில் தண்டப்போலீஸ் இங்கே வைக்கப்பட்டது. அதை வாபீஸ் செய்துகொண்டு, தண்டவரியை ரத்துச்செய்ய வேண்டிய காலமல்லவா இது? சட்ட மறுப்புக்காரர்களுக்கு விதித்த பெரும் பெரும் அபராதத் தொகைகளை வசூலிக்கச் சர்க்கார் அநேக வியாஜ்யம் தொடுத்திருக்கிறார்களாம். பல வீடுகளை ஜப்தி செய்திருக்கிறார்களாம். ஆனால், ஜப்திக் கடிதாசு தான் சர்க்காரிடம் இருக்கிறது. அந்த வீடுகளையோ பூகம்பம் ஜப்தி செய்து கொண்டு போய்விட்டது. இதெல்லாம் ஈரமிரக்கமற்ற நடவடிக்கைகளல்லவோ? சர்க்கார் அந்தத் துரதிர்ஷ்ட மாகாணத்துக்கு நேர்ந்திருக்கும் ஆபத்தை எண்ணிப் பார்க்கலாகாதா? சட்ட மறுப்புக் கைதிகளையெல்லாம் விடுதலை செய்துவிட வேண்டும்; விதித்த தண்டங்களையெல்லாம் ரத்துச் செய்துவிட வேண்டும். இதைத் துரைத்தனம் உணர்ந்துகொள்ள வேண்டும் என்று நாம் திரும்புத் திரும்பச் சொல்ல விரும்புகிறோம்." —"டிரிப்யூன்"

அருட் ஜோதி

பழைய காலணாச் சங்கு உருவத்தில் வாரப் பதிப்பாக, தர்மபுரியினின்று தோன்றியுள்ள இப்பத்திரிகை எப்போதும் தமிழகச் சேவையி லீடுபட்டுக் கொண்டிருப்பதாக.

பிரசுரிப்பவர்,
அருட்ஜோதி ஆபீஸ்,
தருமபுரி, (சேலம் ஜில்லா).

கூட்டுறவு

மாத மிருமுறை வெளியீடு

ஆசிரியர் : E. S. சுந்தா, பி.ஏ., பி.எல்.
கூட்டுறவு பெடரேஷன், கோயமுத்தூர்.

தமிழருக்குக் கூட்டுறவு இயக்கத்தின் நன்மைகளைப் போதிப்பதற்காகத் தோன்றியுள்ள இப்பத்திரிகை அரிய ஊழியத்தி லீடுபட்டிருக்கிறது.

ஆற்றோடு போன குடும்பம்

பட்டினிக்கும் தற்கொலைக்கும் அதிக தூரமில்லை. திருச்சினாப்பள்ளியிலிருந்துக் கிடைத்த ஓர் செய்தியின்படி வெகு நாளாக வேலையில்லாக் கொடுமையினாலும், பட்டினியாலும் அவஸ்தைப் பட்ட ஒரு மனிதன் தனது மனைவி மக்களைக் காவேரியில் தள்ளிக் கொன்று விட்டுத் தானும் ஆற்றிலே விழுந்து மாண்டு போனான். அதே ஊரில் வேறு இருவர்கள் ரயில் வண்டி ஓடும் போதுக் குறுக்கேவிருந்து சாவதற்குப் பிரயத்தனித்திருந்தார்களாம். காரணமென்ன? பட்டினிதான். இந்தத் துர்பாக்கிய நாட்டில் இத்தகைய தற்கொலைகளை அபூர்வமென்று கூறுவதற்கில்லை. இப்படித் தேசம் வறுமையில் வாடுவதை அதிகார தேவதைகளில் சில உணராதிருக்கின்றனவே அதுதான் விசனிக்கத் தக்கது.

—அ. பஜார் பத்திரிகை.

பிரான்ஸிலும் இந்தியாவிலும்

ஜாலியன்வாலாத் தோட்டத்தில் எதிர்ப்புப் புத்தி இன்றிக் கூடியிருந்த ஒரு கூட்டத்தின்மீது ஜெனரல் டயர் என்பான் சுட்டான். கையிலிருந்த அத்தனை குண்டுகளும் செலவழியும் வரையில், நூற்றுக்கணக்கான பேர் செத்து, இன்னும் பல மடங்கு பேர் காயமடையும் வரையில், அவன் வெடி தீர்த்தான். ஆனால் சில நாட்களுக்கு முன்னே பிரான்ஸில் 50 ஆயிரம் பேர் கலக நோக்கத்தோடு எதிர்த்த போது அங்கிருந்த தேசீய சர்க்கார் அந்தக் கூட்டத்தின் மீது கூட சுடுவதற்குத் துணியவில்லை. தேவைக்கு அதிகமாகப் பலாத்காரத்தை உபயோகித்தால் பிரஞ்சு மக்கள் பொங்கி யெழுந்து விடுவார்களென்ற எண்ணம் ஏற்பட்டிருக்கலாம். குடிகளைப் பொறுப்புடன் ஆளும் துரைத்தனத்துக்கும் பொறுப்பில்லாது ஆளும் ஆட்சிக்கும் உள்ள வித்தியாசத்தை இவைகளினின்று அறியலாமன்றோ?

—ஹிந்து அப்ஸர்வர்.

கதரையே

அணியுங்கள்

யாத்ரா மார்க்கம்

"யார் கைக் கருவியுமல்ல"

சில சுயமரியாதைக்காரர்கள் கறுப்புக் கொடிகளைத் தாங்கிக்கொண்டு, சீயாழிப் பொதுக்கூட்டத்தில் நிற்பதை மகாத்மாஜீ கண்டார். தமது பிரசங்கத்தில் அவர்களுக்குச் சொன்ன சில வார்த்தைகள் வருமாறு :—"சிலர் கறுப்புக் கொடிகள் பிடித்து நிற்பதைக் காண்கிறேன். அவ்வாறு செய்ய அவர்களுக்குப் பூரண உரிமையுண்டு. ஹரிஜன நிதி எதற்காக வசூலிக்கப்படுகிறதோ அந்தக் காரியத்துக்கு உபயோகிக்கப்படாது என்று அவர்கள் நினைத்துக்கொண் டிருக்கிறார்கள். மேலும், நான் சில முதலாளிகள் கைக் கருவியாக இருக்கிறேன் என்றும் அவர்கள் நினைத்துக் கொண் டிருக்கிறார்கள். ஆனால், நான் அவர்களுக்கு ஒரு உறுதி கூறுகிறேன். என் மனசு அறிந்த மட்டில், நான் எவர் கைக் கருவியு மல்ல ; சர்வ வல்லமையுள்ள ஆண்டவன் ஒருவனது கருவியாகவே இருக்கிறேன்."

"நகர மாட்டேன்"

தென்னாற்காடு ஜில்லா போர்டார் மகாத்மாஜீக்கு ஒரு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார்கள். ஆனால், பண முடிப்பு எதுவும் கொடுக்கவில்லை.

அதைக் கண்ட காந்திஜீ கூறியதாவது :—"எங்கே ஹரிஜனப் பண முடிச்சு? பீஹாரப் பண முடிச்சு எங்கே? நான் இந்த இடத்தை விட்டு நகர மாட்டேன். நான் மாத்திரம் இங்கே தனியாக உட்கார்ந்துகொண் டிருக்கப் போகிறேன்."

ஐயன் இவ்வாறு கூறியதும், ஜில்லா போர்டுப் பிரஸிடெண்டு ஜனாப் ஸி. அப்துல் ஹக்கீம் அந்த இடத்திலேயே 200 ரூபாய் நன்கொடை யளித்தார்; மற்ற அங்கத்தினரும் 251 ரூபாய் கொடுத்தார்கள்.

ஆண்டவன் அமைத்த கோயில்

பிரசித்தமான தஞ்சாவூர்ப் பெரிய கோயிலைத் தஞ்சைக் கூட்டத்தில் ஞாபகத்துக்குக் கொண்டு வந்த காந்திஜீ, அப்போது சொன்ன மனமுருக்கும் சில வார்த்தைகள் வருமாறு :—"உங்கள் அழகிய கோயிலைத் தரிசித்தேன். அதைப் பார்த்த இரண்டொரு விநாடிக்குள், கீழ்த் திசை அடிவானத்தே சூரியன் உதயமானதைக் கண்டேன். என்னை நானே ஒரு கேள்வியைக் கேட்டுக் கொண்டேன். இந்தச் சூரியன் ஜாதி ஹிந்துக்களுக்காக மாத்திரம் எழுந்தானோ, அன்றி ஹரிஜனங்களுக்கும் சேர்த்தே தோன்றினானோ? இதன் விடையை நான் உடனே கண்டுபிடித்தேன். சூரியன் துளியும் பாரபட்ச மற்றவன். ஜாதி ஹிந்துக்களைவிட, ஹரிஜனங்களை அதிகமாக எண்ணியே அவன் உதித்திருக்க வேண்டும் என்றுகூடத் தோன்றிற்று. ஜாதி ஹிந்துக்களுக்குப் பணம் இருக்கிறது. மாளிகை போன்ற வீடுகளில் அவர்கள் அடைத்துக் கிடக்கிறார்கள். சூரியன் உதித்த பின்னர்க்கூட, தங்கள் மேனியில் ஒளி படாமல் அவர்கள் உறங்கிக் கிடக்கிறார்கள். ஏழை ஹரிஜனங்களோ, உதய சூரியனுக்கு முன்னே துயில்விட்டு எழுகிறார்கள். ஆகையால், நம்மிற் பலர் பாயிலும் கட்டிலிலும் படுத்துப் புரண்டு கொண்டிருக்கும் போதே, ஹரிஜனங்கள் சூரிய ஒளியில் ஸ்நானம் செய்து விடுகிறார்கள். ஆண்டவன் நிருமித்த கோயிலே சூரியன். அந்தக் கோயில் முழு உலகத்துக்கும் திறந்து கிடக்கிறது. அப்படி யிருக்க, மனிதன் கட்டிய கோயில் ஹரிஜனங்களுக்கு மாத்திரம் மூடிக் கிடக்கலாமோ?"

மௌன தினத்தில்

மகாத்மாஜீ கோடம்பாக்கத்திற்கு விஜயம் செய்தபொழுது, முதல் நாள் மௌன தினம். அன்றையக் காட்சியை "இந்தியன் எக்ஸ்பிரஸ்" நிருபர் பின்வருமாறு வர்ணித்திருக்கிறார் :—"ஸ்ரீமான் ஸி. ராஜகோபாலாச்சாரியார், ஸ்ரீஜத் தாக்கர், மீராபென், மிஸ். மூரியல் லெஸ்டர், உமாபென் முதலியவர் புடைசூழ மகாத்மாஜீ காலை 5-30 மணிக்குப் பெரம்பூர் வந்து சேர்ந்தார். அங்கிருந்து அவர்களை ஸ்ரீ ஜத் ரூப்சந்த் பிராதாப்மல் ஸ்ரீமான் எஸ். கணேசனுடைய ஹரிஜனக் கைத்தொழிற் கலாசாலைக்கு அழைத்துச் சென்றார். காந்திஜீ இரண்டு நாள் தங்குவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை ஸ்ரீமான் கணேசன் செய்து வைத்திருந்தார். "ஹரிஜன்" ஆசிரியர் ஸ்ரீமான் ஆர். வி. சாஸ்திரியாரும் அவர் மனைவியும் விருந்தினரை உபசரித்தார்கள். டைம்பீஸ் கடிகாரத்தின் 'டிக், டிக்' என்ற சத்தம், காந்திஜீக்குப் பால் கொடுக்கக் கொணர்ந்திருந்த நான்கு வெள்ளாடுகள் 'அம்மா' என்று சிறிது நேரத்துக் கொருதரம் செய்த கத்தல், பக்கத்து மரக்கிளைகளில் அமர்ந்து பட்சிகள் கூவும் ஓசை, இவை தவிர வேறு சந்தடியே கிடையாது. மீராபென் அங்குமிங்கும் சிட்டுப்போல ஓடித் தன் கடமைகளைக் கவனித்துக் கொண்டிருந்தாள். மூரியல் லெஸ்டர் பலருடனும் பேசியவண்ணம், புல் தரையில் உலாத்திக் கொண்டிருந்தாள். தாக்கர் பாபு நண்பர்களுடன் காந்திஜீயின் தமிழ்நாட்டுச் சுற்றுப் பிரயாணத்தைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார். தொண்டர்கள் தம் கடமையில் கவனம் செலுத்திக் கொண்டிருந்தனர். விஜயநகரம் மகாராணி, ஸ்ரீமதி அம்புஜம்மாளோடு வந்து, மகாத்மாஜீக்கு "நமஸ்காரம்" செய்தாள். காந்திஜீ உபசாரத்தோடு, சமிக்ஞைகள் மூலம் அவர்களை க்ஷேமம் விசாரித்தார்."

அரங்கசாமி அய்யங்கார் வீட்டில்

காலஞ்சென்ற "ஹிந்து" ஆசிரியர் ஏ. அரங்கசாமி அய்யங்கார் வீட்டுக்கு மகாத்மாஜி சென்று, திவான் பகதூர் கோபாலசாமி அய்யங்காரையும், ஸ்ரீமான் சீனிவாசனையும் துக்கம் விசாரித்தார். பின்னர் வீட்டுக்குள் அரங்கசாமியின் மனைவியைப் பார்த்து ஆறுதல் சொல்லக் காந்திஜீ சென்ற பொழுது, அந்த அம்மாள், அழ ஆரம்பித்து விட்டாள்; கண்ணீர் சொரிந்து விட்டாள். காந்திஜீ கூறியதாவது:—"அழாதே அம்மா! ரங்கசாமி பத்திரிகைத் தொழிலில் சிறந்தவர். இதைப் பற்றி எல்லாரும் சொல்லி விட்டார்கள். ஆனால், அவரிடம் வேறு சில அருங்குணங்கள் இருந்தன. அவற்றையே நான் பெரிதும் மதிக்கிறேன்." பின்னர், ரங்கசாமி செய்த தேச சேவையைத் தொடர்ந்து நடத்தும்படி அந்த அம்மாளுக்கு யோசனை கூறிவிட்டுத் திரும்பினார்.

சீனிவாசய்யங்கார் சந்திப்பு

பிறகு, ஸ்ரீமான் எஸ். சீனிவாசய்யங்காரின் குமாரி அம்புஜம்மாளின் வேண்டுகோளின் மேல், காந்திஜீ, சீனிவாசய்யங்கார் வீட்டுக்குச் சென்றார். இது சீனிவாசய்யங்காருக்கு முன்னதாகத் தெரியாது. திடீரென்று காந்திஜீ வந்ததைக் கேட்டு, சீனிவாசய்யங்கார் வியப்பும் சந்தோஷமுமடைந்து, மகாத்மாஜீயை அன்போடு வரவேற்றார். லாகூர்க் காங்கிரஸுக்குப் பிறகு சீனிவாசய்யங்கார், மகாத்மாஜீயை முதன் முதலாகச் சந்தித்தது இது தான். இருவரும் பேசிக்கொண்டிருக்கையில் அம்புஜம்மாள் எட்ட மரியாதையாக நின்று கொண்டு, மகிழ்ச்சி பொங்க நின்று கொண்டிருந்தாள். சம்பாஷணை ஒரு மணி நேரம் நடைபெற்றது. இடையிடையே, 'கலீர்' 'கலீர்' என்ற சிரிப்பு நிறைந்திருந்தது.

கறுப்புக் கொடியினரின் "காந்திக்கு ஜே!"

திருச்சியில் மகாத்மா காந்திக்கு எதிர்ப்புச் சிறிது பலமாயிருக்குமென்று நினைத்துக்கொண்டிருந்தார்கள். ஆனால், அப்படி யொன்றும் நிகழவில்லை. மகாத்மாவின் கார் நெருங்கியபொழுது நடந்த ஒரு சம்பவம் வேடிக்கையானது. பல சின்னஞ் சிறு குழந்தைகள் கறுப்புக்கொடிகள் பிடித்துக்கொண்டிருந்தார்கள். ஆனால், கள்ளமில்லா மனத்தோடு புன்முறுவலுடன் நின்ற அவர்களும் மற்றவர்களோடு, "காந்திக்கு ஜே!" என்று கோஷித்தார்கள். இதைக் கண்டு யார்தான் வியப்பும் சந்தோஷமும் அடையமாட்டார்கள்?

"நிறுத்தி வைக்க முடியாது"

(மகாத்மா காந்தி)

["ஒரே ஒரு சனாதனி தடுத்தாலும் ஹரிஜனங்களைக் கோயிலுக்குள்விட வேண்டாம்" என்று ஒரு நிருபர் எழுதினார். "கோயில் பிரவேசம் ஒருநாள் நடக்கவேண்டியதுதான். ஆனால், அதற்குக் காலம் வரும் வரையில், மற்ற உரிமைகளுக்காக எல்லாரும் ஒற்றுமையோடு உழைக்கவேண்டும்" என்று இன்னொருவர் எழுதினார். இரண்டுக்கும் மகாத்மா காந்தி பின்வரும் பதிலை "ஹரிஜன்" பத்திரிகையில் எழுதியிருக்கிறார்.]

மிகப் பெரும்பாலோருடைய விருப்பத்துக்கு விரோதமாக ஒரே ஒரு மனிதன் அபிப்பிராயப்பட்டால், இவன் இஷ்டப்படி மற்ற யாவரும் நடக்க வேண்டுமென்பது பலாத்காரமேயாகும். கொடுங்கோலர்களைத் தவிர வேறெவரும் அவ்வாறு செய்ததாகச் சரித்திரத்திலே காணோம்; அப்படிச் செய்தவர், தாங்களே நாசமாய்ப் போய் விட்டார்கள். மிகப் பெரும்பான்மையோருடைய சம்மதமில்லாமல் ஒரே ஒரு கோயிலைத் திறக்கக் கூடச் சீர்திருத்தக்காரர் விரும்பவில்லை. இதைப் பலாத்காரமென்று சொல்லக்கூடாது. சிறு பான்மையோரிடம் பொறுமையாகவும் சகிப்புத் தன்மையுடனும் நடந்துகொள்ள வேண்டியதுதான். ஆனால், இப்போதிருக்கும் நிலைமைகள் அப்படியே இருக்கவேண்டுமென்று சிறு பான்மையோர் வற்புறுத்தலாமோ? அதனால் வளர்ச்சியில்லாமல் போய், தற்கொலைக்குச் சமமாய் அழிய வேண்டி நேரிடும். ஒன்று தீண்டாமையை மாய்க்கவேண்டும்; அல்லது நாம் மாய வேண்டியதுதான். நாளைக்குச் சூரியன் உதயமாகப் போவது எவ்வளவு உண்மையோ, அவ்வளவு உண்மையானது இந்த வார்த்தைகளும்.

சீர்திருத்தக்காரர்களுக்குச் சனாதனிகளிடம் மனக் கசப்புக் கிடையாது. பொதுஜனங்களின் அபிப்பிராயத்தைத் தங்கள் பக்கம் திருப்பும் வேலையிலேயே அவர்கள் முனைந்திருக்கிறார்கள். இந்த உரிமை சீர்திருத்தக்காரர்களுக்கு உண்டு என்பதைச் சனாதனிகள் அறிந்துகொண்டால், மனவருத்தத்துக்கு இடமே கிடையாது.

ஆலயப்பிரவேசக் கிளர்ச்சியை அடியோடு நிறுத்திவைக்க முடியாது; நடந்து கொண்டுதானிருக்கும். ஆனால், வைதீகர் உணர்ச்சிகளுக்கு மிகுந்த மதிப்புச் செலுத்தப்படும். சீர்திருத்தக்காரர்களின் இந்தப் போக்கு எவ்வளவு நிதானமானது என்பதைச் சனாதனிகள் உணர்ந்து கொண்டால், எதிர்ப்பு நாடகம் நடத்தமாட்டார்கள். மற்றக் காரியங்களில் அவர்களும் சேர்ந்து உழைக்கலாம். அப்படிச் செய்தால், இந்த இயக்கம் முழுவதுமே மிக அழகாக நடக்கும்; எவர் உணர்ச்சிகளும் புண்படாது.

சீர்திருத்தத்துக்குச் சட்ட ரீதியான ஒரு தடையிருக்கிறது. அந்தத் தடையை நீக்குவதற்காகத்தான், சட்டசபையில் கொண்டு வரப்பட்டிருக்கும் மசோதாக்கள் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. அதில் ஒன்றும் பலவந்தமில்லை. ஹிந்து அங்கத்தினரில் பெரும்பான்மையோர் அவற்றை எதிர்த்தால், அதற்கு எதிரேயும் அவை நிறைவேறி விடவேண்டும் என்று நான் விரும்பவேயில்லை. நீண்ட காலமாகப் பாக்கி கிடந்துவரும் ஆலயப் பிரவேசச் சீர்திருத்தத்துக்கு ஹிந்து அங்கத்தினரில் பெரும்பான்மையோர் ஆதரவு தரும் வரைக்கும் நான் காத்திருக்க வேண்டியதுதான்.

BOOKS OF THE HOUR

By C. Rajagopalachar		
Chats Behind Bars	... 0	6
By Romain Rolland		
Mahatma Gandhi—a study	... 0	8
By Mahadev Desai		
Gandhiji in Indian Villages	... 2	0
Gandhiji in Ceylon	... 1	4
By Rajendra Prasad		
Candhiji in Champaran	... 2	8
By Krishna Das		
Seven Months with Mahatma Gandhi	... 3	8
By Richard B. Gregg		
Economics of Khaddar	... 1	0
Gandhiji's Satyagraha (2 Vols.)	2	8
Gandhism & Socialism	... 0	2

Swathanthra Sangu Book Depot
8-c, Pycrofts Road,
Triplicane, Madras.

செய்தால் என்ன?

உண்மையை எத்தனை தடவை சொன்னாலும், அதன் மதிப்புக் குறைந்துவிடாது. மதிப்புக்கும் சலிப்புக்கும் சம்பந்தமில்லை. "பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்" என்று, அந்நிய பாஷைகளில் பரிச்சயம் மிக்க நமது புதுமைக்கவி ஆசைகொண்டார். இந்த அடிகளை நாமும் எத்தனையோ தடவை பாடிவிட்டோம்; பாடிக்கொண்டிருக்கிறோம். ஆனால், அவருடைய ஆசையின் வன்மையை நம்மிற் பெரும்பாலோர் உணர்ந்திருப்பார்களோ என்பது மட்டில் சந்தேகந்தான். அவரது அளவிகந்த தமிழ்க் காதல்தான் இவ்வாசைக்குக் காரணம்.

முன்னம் ஒரு பத்திரிகாலயத்தில், சில நண்பர்கள் வருவார்கள். "என்ன, ஸார்! உங்கள் பத்திரிகையில் சுயமான கட்டுரைகள் அதிகம் கிடையாது. காப்பி (அதாவது மொழிபெயர்ப்பு) மலிந்திருக்கிறதே" என்று அவர்கள் சொல்லுவார்கள். மொழி பெயர்ப்பே 'காப்பி' என்பது அவர்கள் எண்ணம். மொழி பெயர்ப்பில் குறைகளிலிருந்து குறிப்பிட்டிருந்தால், திருத்திக்கொள்ள முயற்சிக்கலாம்; அது அவசியமுமாகும். மொழிபெயர்ப்பே பிரயோசனமற்றது என்பது தப்பான அபிப்பிராயம். வளரும் இலக்கியத்திலே மொழிபெயர்ப்புக்கும் தாராளமாக ஒரு இடம் உண்டு.

ஆங்கிலத்தைப் பாருங்கள். உலகத்திலுள்ள எத்தனை பாஷைகளிலிருந்து நல்ல நல்ல எழுத்துக்கள் எவ்வளவு ஏராளமாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன; மொழிபெயர்க்கப்படுகின்றன! ஆங்கிலம் தெரிந்தால் போதும்; பிரஞ்சு, ஜெர்மன், ருஷ்யா, நார்வே, ஸ்வீடன், ஜப்பான் முதலிய இன்னும் எத்தனையோ நாடுகளின் தற்போதைய ஜீவிய இலக்கியத்தை ஓரளவு ரசிக்க முடியும். அந்த நாட்டு நூல்களில் முக்கியமான அநேகம் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன.

மொழிபெயர்ப்பு ஆசை தவறல்ல. நல்ல மொழிபெயர்ப்பு வேண்டுமென்பது வேறு சங்கதி. என்றைக்கிருந்தாலும், யாரோ ஓர் தி ஜ. ர. எழுதும் கட்டுரையைவிட, ஒரு பேரறிஞர் ஷாவின் எழுத்துப் பல்லாயிரம் மடங்கு விஷயச் சிறப்புமிக்கதன்றோ?

சொத்துக்களெல்லாம் பொது உடைமை ஆகுமோ ஆகாதோ, கூடுமோ கூடாதோ, அது எப்படியானாலும் சரி; முத்துப்போன்ற அரிய கருத்துக்களெல்லாம், பொது உடைமையாகிவிடவேண்டும். அவை எங்கே, எந்தத் தேசத்திலே, எந்தக் காலத்திலே பிறந்தாலென்ன? நத்தையின் வயிற்றிலே பிறக்கும் முத்தை எப்படிப் போற்றுகிறோம்! உன்னதக் கருத்துக்களோ, கால தேச வர்த்தமானங்களுக்கிசையவே பிறந்தாலும், எல்லாருக்கும் எந்தக் காலத்துக்கும் போதிக்கக்கூடிய நித்தியசக்தி வாய்ந்தவை. பாஷைகள் என்பவைதான் என்ன? கருத்துக்களின் ஜனன சரித்ர முத்திரைச் சங்கிலிகளேயாகுமன்றோ? ஒரு பாண்டத்திலிருக்கும் பண்டங்களை இன்னொன்றில் மாற்றலாகாதா? அதில் அற்ப சேதங்களிருக்கலாம். ஆனால், பலன் ஏராளமானது.

மொழிபெயர்ப்பு என்றாலே சலிக்கும் மனோபாவத்திலிருந்து, ஒரு அலட்சிய புத்தி மட்டிலுமன்று, குற்றமொன்றுகூட, தமிழ் நாட்டில் அதிகரித்து வருவது வருந்தத்தக்க விஷயம். சில நல்ல ஆசிரியர்கள்கூட அந்நிய பாஷைகளிலுள்ளவற்றைத் தழுவி எழுதும்பொழுதோ, மொழி பெயர்க்கும் பொழுதோ, தங்களுக்கு விஷயம் கிடைத்தவிடத்தைத் தெரிவிக்கக் கூச்சப்படுகிறார்கள். இந்தத் தவறான கூச்சத்திற்குப் பொறுப்பாளி, மொழிபெயர்ப்பை வாசகர் சற்று அலட்சியமாய் நோக்கும் மனோபாவந்தான்.

நல்ல விஷயங்களை எந்தப் பாஷையிலிருந்தேனும் கொய்து, ஏன் இனிய தமிழில் மொழி பெயர்க்கலாகாது? உயர்ந்த அசல் தமிழ் எழுத்துக்களோடு அவை போட்டிபோட வேண்டாம்; இவற்றின் இடத்தை அவை ஆக்கிரமணம் செய்துவிடவும் வேண்டாம். ஆனால், சிறந்த மொழிபெயர்ப்புக்களுக்கும், உரிய ஸ்தானத்தைக் கொடுப்போம். அதனால் அடையும் பயனில் மிகப்பெரும் பகுதி நம்முடையதுதான்; அந்நியருடையதல்ல.

—தி. ஜ. ர.

Rambles in Vedanta

BY

B. R. RAJAM AIYAR

THE variety of the *pabulum* presented in this volume will be found pleasant and delicious both by the young and the advanced. While every morsel it contains is nutritious and easy of assimilation, not a few delicacies will be discovered which are exquisitely spiced and flavoured with stories and illustrations from the Puranas. The aim which runs through all—from the short fancy of Suka's advent to the long life-tale of Vasudeva—is the realisation of the Self, the knowledge of the Atman the elaboration and impression of the sublime truth taught by all religions, by the Vedas and the Puranas by the hoary sages of antiquity, by the Lord Sri Krishna, and reiterated by the Lord Jesus Christ in those hallowed words which will live for ever —" What shall it profit a man, if he shall gain the whole world and lose his own soul ?"

Rs. 5

Swathantra Sangu Book Depot

Triplicane :: Madras.